Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 | செய்தி: 021 493 0000, விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 210 ஆனி 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை 26 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## 20 ஆசனங்கள் இலக்கு!

நம்புகிறார் சம்பந்தன்

திருகோணமலை, ஜூன் 26

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20 ஆசனங்களைக் கைப்பற்றும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை தெரி 19

## கொரோனா 2010

கொழும்பு, ஜூன் 26

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி தொற்றுக்குள்ளா 19

கருணாவின் கைதை வலியுறுத்தி

# அரசுக்கு எதிராக விரைவில் தேரர்கள் தீவிர போராட்டம்!!

ஓமல்பே சோபித தேரர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 26

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைப் படுகொலை செய்த கருணாவிடம் விசாரணை மட்டும் நடத்தி பௌத்த சிங்கள மக்களைச் சமாளிக்க வேண்டாம். அவரை உடன் கைதுசெய்து சிறையில் அடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் நாடெங்கிலும் கருணாவின் கைதை வலியுறுத்தியும் அரசுக்கு எதிராகவும் மாபெரும் போராட்டங்களை நடத்துவோம்' இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தென் மாகாண தேரர்களின் தலைவர் ஓமல்பே சோபித தேரர். 19

## கொலைகாரனைப் பாதுகாப்பது ராஜபக்சக்களுக்குப் புதிதல்ல!

*மஹிந்தவுக்கு சஜித் சாட்டையடி*



கொழும்பு, ஜூன் 26

'கொலைகாரர்களைப் பாதுகாப்பது ராஜபக்சக்களுக்குப் புதிது அல்ல. அதுதான் கொலைகாரன் கருணாவையும் பாதுகாத்துவரும் 19

11 இளைஞர்கள் கடத்தல்

## விசாரணைக்கு திடீர் இடைக்காலத் தடை!

கொழும்பு, ஜூன் 26

11 இளைஞர்களை கடத்திய சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. 2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மட்டக்களப்பு, திருகோண 19




## கோத்தா அரசின் வாக்குகளை குறைப்பதற்கே எனக்கு குறி!

இப்படிச் சொல்கின்றார் கருணா

கொழும்பு, ஜூன் 26

கோத்தாபய அரசுக்கான சிங்கள மக்களின் வாக்குகளை குறைப்பதற்காகவே எனது கருத்தை பூதாகரமாக்கி பரப்புரை செய்யப்படுகின்றது. இதனை முறியடிக்க வேண்டும்' 19

## புலிகளுக்கு எதிரான ஆயுதங்களே ஸஹ்ரானுடைய கையில் சிக்கின!

18

## வாள்முனையில் 15 பவுண் கொள்ளை

*சிறுவிளானில் சம்பவம்: மக்கள் அச்சத்தில்!*

இளவாலை, ஜூன் 26

இளவாலை சிறுவிளான் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு கூரைபிரித்து முகத்தை மூடியவாறு வாள்களுடன் உள்நுழைந்த நான்கு பேர் கொண்ட கும்பல், 15 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் 19

DFCC சஹநய

DFCC வங்கியானது COVID -19 காரணமாகப் பாதிக்கப்பட்ட, சிறிய மற்றும் நடுத்தர அளவு ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு சலுகை வட்டி வீதத்துடன் கூடிய விசேட கடன் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது.

கடன் திட்டம்

கடன் தொகை - ரூபா.5 - 25 மில்லியன்
ஆண்டு வட்டி வீதம் - 9%
மீளச் செலுத்தும் காலம் - 04 ஆண்டுகள்

கடன் வசதியின் வகை - தவணைக் கடன்கள் / நிரந்தர தொழிற்படு மூலதனம்

முன்னுரிமை வழங்கப்படும் தொழில் துறைகள்

ஏற்றுமதி சார்ந்த தொழில் துறைகளில் இயங்கும் நிறுவனங்கள்.



24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 9ஆவது நாடாளுமன்றின் கன்னி அமர்வு எப்போது?

## ஜனாதிபதியின் அறிவிப்பு விரைவில் என்கின்றார் அமைச்சர் பந்துல



**கொழும்பு, ஜூன் 26**

**9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு எப்போது நடைபெறும் என்பது தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்பு உரிய நேரத்தில் வெளியாகும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், புதிய நாடாளுமன்றம் எப்போது கூடும் என்பதற்கான அறிவிப்பை ஜனாதிபதி இன்னும் வெளியிடவில்லை. அவரின் அந்த அறிவிப்பு எப்போது வெளியாகும்? என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தாவது; ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு சட்டத்திட்டங்களுக்கு மதிப்பளித்து அரசமைப்பின் பிரகாரம் செயற்படும் நபராவார். எனவே, உரிய வகையில் சட்டஆலோசனை கிடைத்த பின்னர், உரிய நேரத்தில், உரிய வகையில் அவரின் அறிவிப்பு வெளியாகும்.

ஜனாதிபதி நிதியை பயன்படுத்தும்போது அது சட்டவிரோதம் என சிலர் வாதிட்டனர். ஆனால், அரசமைப்பின் 153ஆவது சரத்தை சுட்டிக்காட்டி பயன்படுத்தலாம் என்று தெரிவித்தோம். இறுதியில் நீதிமன்றம்கூட சென்றார்கள். ஆனால், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, அரசமைப்பை மீறும் வகையில் ஜனாதிபதி செயற்படமாட்டார். புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட்ட பின்னர் வரவு செலவுத் திட்டமும் முன்வைக்கப்படும் என்றார்.

அதேவேளை, உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றை நடத்தும் கால எல்லை மற்றும் நடத்தும் விதம் தொடர்பில் உறுதியான முடிவொன்றை எடுக்குமாறு கல்வி அமைச்சருக்கு, அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார். (எ44)

# கருணாவிடம் கேள்விக்கணை

## 7 மணிநேரமாகத் தொடர்ந்தது

கொழும்பு, ஜூன் 26

கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நேற்று 7 மணி நேரத்துக்கும் மேலாக வாக்குமூலம் பதிவுசெய்தனர். அவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் பலகோணங்களில் கேள்விகள் தொடுக்கப்பட்டு, தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன எனவும்தெரியவருகின்றது.

ஆனையிறவு சமரின்போதும், கிளிநொச்சியிலும் ஒரே நாளில் இரண்டாயிரம், மூவாயிரம் இராணுவத்தினரை கொன்றொழித்ததாக கருணா அம்மான் வெளியிட்டிருந்த கருத்தானது தெற்கு அரசியலில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் இதுவே பேசுபொருளாக உள்ளது. அத்துடன், கருணா அம்மானுக்கு எதிராக போராட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

கருணா அம்மான் வெளியிட்டிருந்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு பதில் பொலிஸ்மா அதிபர் கடந்த 22ஆம் திகதி பணிப்புரை விடுத்திருந்தார். இதன்படி வாக்குமூலம் அளிப்பதற்காக வருமாறு கருணா அம்மானுக்கு சி.ஐ.டியினர் அறிவுறுத்தல் விடுத்திருந்தனர். அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு விசேட விசாரணைக் குழுவொன்றை அனுப்பவும் ஏற்பாடுகள் இடம்பெற்றன.

எனினும், 22 முதல் 24 ஆம் திகதிவரை விசாரணைக்கு வருவதை கருணா தவிர்த்து வந்தார். கடைசியாக சுகவீனம் அடைந்துள்ளதாக தனது சட்டத்தரணி ஊடாக சி.ஐ.டியினருக்கு தெரியப்படுத்தினார். இந்நிலையில் நேற்றைய தினம் முன்னிலையாகாவிட்டால் கருணாவை கைது செய்வதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளும் இடம்பெற்றிருந்தன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நேற்றுக் காலை 10.30 மணியளவில் சி.ஐ.டி. அலுவலகத்துக்கு வருகை தந்தார் கருணா அம்மான். அதன்பின்னர் அவரிடம்மாலை 4 மணிவரை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.(ஒ.5,44)

# கலாசார மண்டப கட்டணத்தை செலுத்துவது மாநகர சபையா?

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் விளக்கம் கேட்பதற்கு முடிவு

**யாழ்ப்பாணம், ஜூன் 26**

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்படும் கலாசார மண்டபத்துக்கான மின்சாரக் கட்டணத்தை யாழ்ப்பாணம் மாநகர சபைதான் செலுத்த வேண்டுமா என்பது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் விளக்கம் கேட்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நிதி உதவியில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பான ஒப்பந்தம், இந்திய அரசு, இலங்கை அரசு, யாழ்ப்பாணம் மாநகர சபை இடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டு வரையில் மின்சாரக் கட்டணமாக 34 லட்சத்து 26 ஆயிரத்து 751 ரூபா யாழ்ப்பாணம் மாநகர சபையால் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றுமுன்தின அமர்வில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. 'கட்டடம் யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே மாநகர சபை பணத்தைச் செலுத்த வேண்டும் எனவும், இணைப்புக்களுக்கான கொடுப்பனவை மாத்திரமே மாநகர சபை செலுத்த வேண்டும் எனவும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மின்சாரக் கொடுப்பனவை மாநகர சபை செலுத்த வேண்டுமா?' என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைவாக, கட்டணங்களை மாநகர சபைதான் செலுத்த வேண்டுமா என்பது தொடர்பில் ஒப்பந்தத்தில் தொடர்புபட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சைக் கேட்பதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

# கூட்டமைப்பின் முகாமில்! முன்னணியின் வேட்பாளர்

திருகோணமலை, ஜூன் 26

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் வேட்பாளர் அந்தக் கட்சியிலிருந்து விலகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்துள்ளார். திருகோணமலையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்னிலையில் அவருடைய இல்லத்தில் நேற்று இணைந்து கொண்டார். திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் பேரின்பவரதன் லக்ஸ்மன் என்பவரே இவ்வாறு கட்சி தாவியுள்ளார்.

'திருகோணமலை தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்து பிரதிநிதித்துவத்தை இழக்க இடமளிக்க முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதன் தலைவர் இரா. சம்பந்தனையும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றிபெறச் செய்யவேண்டும் என்பதற்காகவே நான் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எனது ஆதரவை தெரிவித்துக் கொள்கின்றேன்' என்று அவர் தெரிவித்தார். (ஒ.5,40)

# கருணாவை கைது செய்யுமாறு உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு, ஜூன் 26

கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடுவளை நகரசபையின் உறுப்பினரான போசெத் கலஹேபத்திரனவால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஆயுதப்படை தளபதியாக செயற்பட்ட காலப்பகுதியில் ஆனையிறவு பகுதியில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை கொலை செய்ததான், கொரோனா வைரஸைவிட கொடூரமானவன் என கருணா அம்மான் கடந்த 19 ஆம் திகதி திகாமடுல்ல பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்த கருத்திற்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூற்று சுயமாக தெரிவிக்கப்பட்ட ஒன்று எனவும் அதில் கொலை செய்ததாக ஏற்றுக் கொண்டுள்ளமையால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் கோரியுள்ளார். பதில் பொலிஸ் மா அதிபர், சட்ட மா அதிபர், கருணா அம்மான் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம-ஒ.5)

## விவேகானந்தநகர் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் சிலைகள் திருட்டு

கிளிநொச்சி, ஜூன் 26
கிளிநொச்சி விவேகானந்தநகர் சிறிமுருகன் ஆலயத்தில் கருவறையில் இருந்த வேல் மற்றும் முருகன், வள்ளி, தெய்வானை சிலைகள் என்பன திருடப்பட்டுள்ளன.

ஆலயத்தின் கூரைகள் பிரிக்கப்பட்டு மேற்படி திருட்டு இடம்பெற்றுள்ளது. சிலைகளுடன் ஆலயத்தின் பயன்பாட்டில் உள்ள பல பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கு தடயவியல் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-214)

## மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்ட பணம் திருட்டு

நெல்லியடி, ஜூன் 26
நெல்லியடியில் வெதுப்பகம் ஒன்றுக்கு முன்னால் விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த பணம், அலைபேசி என்பன திருடப்பட்டுள்ளன. நேற்று மாலை 6.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

### கடந்த மற்றும் எதிர்வரும்

# ஐந்து ஆண்டுகாலச் செயற்திட்டங்களை முன்வைத்து கூட்டமைப்பு விஞ்ஞாபனம்

### அடுத்த மாதம் முற்பகுதியில் வெளிவரும் என்கிறார் மாவை சேனாதிராசா



யாழ்ப்பாணம், ஜூன் 26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை அடுத்த மாதம் முற்பகுதியில் வெளிவரும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. பங்காளிக் கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடியே தேர்தல் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. எமது தேர்தல் அறிக்கையில் பல விடயங்களைக் குறிப்பிடவுள்ளோம். 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, மீள்குடியமர்வு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட விடயங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை வெளியிடவுள்ளோம். இன்னமும் என்னென்ன விடயங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடவுள்ளோம். மேலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் என்ன என்பதையும் சுட்டிக்காட்டவுள்ளோம்.

இதேவேளை நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் எந்த அரசு அமைந்தாலும், அவர்களுடன் கூட்டமைப்பு எவ்வாறான விடயங்களை எந்த அணுமுறையின் அடிப்படையில் பேச்சு நடத்தவுள்ளது என்பன உள்ளிட்ட விடயங்களும் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் - என்றார். (ஒ.5,22)

### தேர்தல் முடியும் வரையில்

## தேவநேசனின் இடமாற்றம் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக ஏ.தேவநேசன் இன்று மீண்டும் நியமிக்கப்பட்டார். நாடாளுமன்றத் தேர்தல் முடிவடையும் வரையில் அவரது இடமாற்றத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக பணியாற்றிய ஏ.தேவநேசன் ஏப்ரல் 11ஆம் திகதி முதல் ஊர்காவற்றுறை மருத்துவமனைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பதில் பணிப்பாளராக மாகாண சுகாதாரத் திணைக்கள திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றிய குமாரவேள் நியமிக்கப்பட்டார். ஊர்காவற்றுறை மருத்துவமனையின் பணிப்பாளராக பணியாற்றிய திலீபன் திட்டமிடல் பணிப்பாளராக இடமாற்றப்பட்டார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் இடமாற்றம் மேற்கொள்ள முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது. ஆணைக்குழு அறிவித்தும் நீண்ட காலத்தின் பின்னரே அந்த உத்தரவு செயற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக தொடர்ந்தும் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பணியாற்றுவார். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாகவே அவர் இந்தப் பதவியிலும் தொடர்வார். (ஒ.5)

### மறுவாழ்வு பெற்றவர்கள்

## போர்க்கால வீராப்பு பேசினால் கைதுசெய்யப்பட வேண்டும்

### விமல்வீரவன்ஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 26
புனர்வாழ்வின் பின்னர் சமூகமயப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள், கடந்த காலங்களில் இழைத்த தவறுகள் தொடர்பில் தற்போது வீரவசனம் பேசினால் அவர்கள் நிச்சயம் கைது செய்யப்படவேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல்வீரவன்ஸ தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்றுமுன்தினம் இரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, கருணா அம்மான் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,
கருணாவின் கருத்தானது மிகவும் பாரதூரமான அறிவிப்பாகும். புலிகள் அமைப்பில் இருந்த 14 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர். பெரும்பாலும் சிங்கள மக்கள் மற்றும் இராணுவத்தினரை கொன்றவர்களே இவர்கள். இவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தியது தவறு கிடையாது. ஆனால் இவ்வாறு புனர்வாழ்வு பெற்று சென்றவர் மேடையேறி, இவ்வளவு சிங்கள மக்கள், இவ்வளவு பிக்குகளை கொன்றேன் என கூறினால் அந்நபரை கைது செய்யவேண்டும், அவரிடம் விசாரணை நடத்தப்படவேண்டும். அவரால் இவ்வாறு கூறமுடியாது. தவறிழைத்திருக்கலாம். ஆனால், அதனை வீரதீரச்செயல் என தற்போது அறிவிக்கமுடியாது. அதற்கு நிகரானதொரு தவறையே கருணா அம்மான் செய்துள்ளார்.

கருணா அம்மானை பாதுகாப்பதற்கு நான் முற்படவில்லை. சி.ஐ.டியினர் விசாரணை நடத்தி வருகின்றனர். அதேபோல் கருணா அம்மானின் அறிவிப்பை விடவும் ஹரின் பெர்னான்டோவின் கருத்து மிகவும் பாரதூரமானது என்றார்.

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை**

அதேவேளை, புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 20, 23 வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்காக ஜனாதிபதி தற்போது தகவல்களை திரட்டிவருகிறார். இதில் பெயரை போட்டுக் கொள்வதற்காகவே அது சம்பந்தமாக பிரதமரை சந்தித்து சுமந்திரன் தரப்பு பேச்சு நடத்தியது. ஜனாதிபதி இவர்களை விடுதலை செய்வார் என்பது அவர்களுக்கு தெரியும்- என்றார். (ஒ.5,44)

## சிவில் பாதுகாப்புப் பணிப்பாளர் வவுனியாவுக்கு நேற்று வருகை

வவுனியா, ஜூன் 26
சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியல் அட்மிரல் ஆனந்த பீரிஸ் வவுனியாவுக்கு நேற்றுப் பிற்பகல் பயணம் மேற்கொண்டார். வவுனியா, மாமடு பகுதியில் உள்ள சிவில் பாதுகாப்பு படைமுகாமிற்கு வருகை தந்த அவர் விவசாய திட்டங்களை விரிவுபடுத்தும் முகமாக மரநடுகை நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன், சிவில் பாதுகாப்பு படையினர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் அவர்களது தேவைகள் குறித்தும் கலந்துரையாடியிருந்தார். சிவில் பாதுகாப்பு துறையினரின் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துதல் சம்மந்தமாகவும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. (ம-18)

தமிழ் மக்களிடம் வாக்குகளைக் கேட்க

# தேசியக் கட்சிகளுக்கு அருகதை இல்லை

## சி.வீ.கே ஆவேசம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

**மிருசுவிலில் தமிழர்களைக் கொலைசெய்த குற்றச்சாட்டில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிக்கு பொதுமன்னிப்பை வழங்கும் தென்னிலங்கை கட்சிகள் துப்பாக்கிகளைக்கூட கையில் ஏந்தாத ஆனந்த சுதாகரன் போன்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க மறுத்துவரும் தேசியக் கட்சிகள் வடக்கு, கிழக்கில் தமிழர்களிடம் வாக்குக் கேட்பதற்கு அருகதை இல்லை என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.**



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர் - யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் தமிழர்களைக் கொடூரமாக சித்திரவதை செய்து கொன்றொழித்த இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக அவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. அவர்களுக்கு நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்தது எனினும் தண்டனை விதிக்கப்பட்டு சில காலங்களிலேயே சிறையில் இருந்த இராணுவ அதிகாரி ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் 25 வருடங்களுக்கு மேலாக தமிழ் அரசியல் கைதிகள் சிறையில்அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் எவ்வித வழக்கு விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியைச் சேர்ந்த ஆனந்த சுதாகரன் என்ற அரசியல் கைதியின் பிள்ளைகள் தாயை இழந்து அநாதரவாக இருக்கின்றபோதும் இன்று வரை தென்னிலங்கை அரசு அவரை விடுவிப்பதற்கு மறுத்து வருகின்றது. ஆனந்த சுதாகரனின் விடுதலையை தென்னிலங்கை தேசியக் கட்சிகள் கூட வலியுறுத்த அழுத்தம் கொடுக்க முன்வரவில்லை. தமிழர்களுக்கு ஒரு நீதி இராணுவத்தினருக்கு ஒரு நீதி என்றே இந்த நாடு பயணிக்கின்றது. தமிழர்களின் இனப்பிரச்சினையில் கூட சிங்கள அரசு அக்கறையற்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. கடந்த நல்லாட்சி அரசிலும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புதிய அரசமைப்பு உருவாக்கம் இடம்பெற்றது. அந்தப் புதிய அரசமைப்பு பல தடைகளையும் தாண்டி நிறைவேற்றுவதற்கு தமிழர் தரப்புக்கள் முயற்சித்தபோதும் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியும் அந்தக் கட்சியைச் சேர்ந்த பிரதமரும் இதற்குத் தாங்கள் பொறுப்பில்லை என்று கைவிரித்து விட்டார்கள். இவ்வாறு தமிழர்களின் அனைத்து விடயங்களிலும் காலை வாருகின்ற செயற்பாட்டைமுன்னெடுக்கும் தென்னிலங்கை தேசியக் கட்சிகள் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்பதற்கு அருகதை இல்லை - என்றார். (ப-20)

# ஒரே இரவில் பொறிமுறை என்பது பெரும் நாடகம்?

## முன்னாள் எம்.பி. ஆசுமாரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமரும் நிதியமைச்சருமான தனது சகோதரருடன் பேசித்தீர்க்க வேண்டிய விடயங்களை மத்திய வங்கி அதிகாரிகளின் தலையில் போட்டுவிட்டு, ஒரே இரவில் பொருளாதார மீட்சிக்கான பொறி முறையை சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு உத்தரவிடுகின்றார். ஒட்டு மொத்த நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைக்க ஒரே இரவில் செயற்றிட்டத்தை உருவாக்க முடியும் என்பது பெரும் நாடகம் போன்று அல் லவா இருக்கிறது? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; எதிர்வரும் பொதுத்தேர்தலின் ஊடாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவோம் என்று ஆளுந்தரப்பினர் கூறுகின்றார்கள். ஆனால் அது வெறுங் கனவாகவே போய்விடும். ஏனெனில் கடந்த காலத்தில் எமது அரசாங்கம் முன்னெடுத்த பல்வேறு சிறந்த செயற்றிட்டங்களை தற்போதைய அரசாங்கம் இடைநிறுத்தியிருக்கிறது. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்துவத்தை இல்லாமலாக்கியிருக்கிறார்கள். ஒரு பொலிஸ் அதிகாரியை இடமாற்றம் செய்யும் பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரத்தில்கூட நாங்கள் தலையீடு செய்ததில்லை. எனினும் இப்போது அந்த நிலை முற்றிலும் மாறியிருக்கிறது. அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் சுதந்திரமாகச் செயற்பட்ட காலப் பகுதியை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும். எமது ஆட்சிக் காலத்தில் முதுகெலும்புடன் செயற்பட்ட அரச ஊழியர்கள் இப்போது முழுவதுமாக முடக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் தற்போது அரச நிர்வாகத்தின் உயர்பதவிகளுக்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். இதனூடாக பல்கலைக்கழகம் சென்று, நன்கு படித்து, நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று அரச நிர்வாகத்தின் உயர்பதவிகளுக்கு தெரிவாக எத்தனிப்பவர்களின் வாய்ப்புக்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது -என்றார். (ப)

# கடவுச்சீட்டுப் பெறும் விண்ணப்பம் குறைப்பு

கொழும்பு,ஜூன் 26

வெளிநாட்டுப்பயணம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், கடவுச்சீட்டுகளுக்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை சுமார் 200 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மூத்த அதிகாரியை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

கொரோனா பரவலுக்கு முன்னர் ஒரு நாள் சேவையின் கீழ், தினசரி ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக திணைக்களத்துக்கு வருகை தந்தனர்.

எனினும், தற்போது இலங்கையர்கள் வெளிநாட்டுப் பயணம் செய்ய ஆர்வம் காட்டவில்லை. இதனால் தற்போதைய நிலைமை எழுந்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருவதற்கு இதுவரை வசதிகள் இல்லாமையால், சுற்றுலாப் பயணிகளின் வரவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார் என்று செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)



# ஆவணப்படுத்தப்படும் மரபுரிமை ஆவணங்கள்

மட்டக்களப்பு.ஜூன் 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்கால சந்ததியினரின் நன்மைகருதி மரபுரிமை ஆவணங்களை டிஜிட்டல் நவீன தொழிநுட்ப முறையில் ஆவணப்படுத்தும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டச் செயலக நூலகம், பௌண்டேசன் மட்டக்களப்பு கிளையின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரக் கூடத்தில் கொலனித்துவ ஆட்சியாளர் காலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மரபுரிமை ஆவணங்களான வரலாற்றுச் சாதனங்கள், ஏடுகள், பண்டைய தொன்மை ஆவணங்கள் மென் பிரதியில் பதிவேற்றம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆவணம் செய்யப்பட்ட பிரதிகள் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜாவிடம் நேற்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.


நூலகம் பௌண்டேசன் நிறுவனத்தின் மட்டக்களப்பு கிளைப் பணிப்பாளர் சொக்கலிங்கம் பிரசாத் அதனைக் கையளித்தார். (க)

# வேள்ட்விஷனால் 2500 பேருக்கு உதவி

வேள்ட்விஷன் லங்கா நிறுவனத்தினரால் கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 31 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும், 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு தலா மூவாயிரத்து 100 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழில் பாதிக்கப்பட்டோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் போன்றோருக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (க)

# மஞ்சளுக்கு மீண்டும் தட்டுப்பாடு



கொழும்பு, ஜூன் 26

நாட்டில் மீண்டும் மஞ்சளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மஞ்சளுக்கான இறக்குமதி வரையறுக்கப்பட்டுள்ளமையால் தட்டுப்பாடு நிலவுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், தற்போது வர்த்தகர்கள் சிலர் கட்டுப்பாட்டு விலையை மீறி மஞ்சளை விற்பனை செய்கின்றனர்.

அதேவேளை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா பரவலை அடுத்து கடந்த மாதங்களில் மஞ்சளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இதனால் மஞ்சள் தூள் ஒரு கிலோ கிராமின் விலை 3 ஆயிரம் ரூபாவைக் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் மஞ்சளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஒரு கிலோ மஞ்சள் 2500 ரூபா முதல் மூவாயிரம் ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது. (க-17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொறுப்பு அரசினுடையதே!

கொரோனாத் தொற்று நாட்டில் இனங்காணப்பட்ட பின்னர் வடக்கில் அடங்கியிருந்த போதைப்பொருள் கடத்தல்கள் இப்போது மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. போதைப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்படும் செய்தி தினமும் காதுகளுக்கு எட்டுகின்றது.அண்மைய நாள்களில் இந்தியாவின் தமிழகத்தில் இருந்து வடக்குக்குக் கடத்தப்பட்ட கஞ்சா நடுக்கடலில் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வடக்குக் கடலின் ஊடாக இவ்வாறான கடத்தல்கள் நடப்பது வழமை என்றாலும் கொரோனா வைரஸ் தொற்றின் பின்னர் இது அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியதொன்றாகி விட்டது.

சர்வதேச ரீதியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்த கொரோனாத் தொற்று இலங்கையில் பரவியபோதும், அதன் பரவல் கட்டுப்படுத்தப்பட்டது. சமூக மட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு சுகாதாரத் துறையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையே அதற்கு முக்கிய காரணம். தற்போதும் நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றபோதும், அவர்கள் சமூகத்துக்குள் இருந்து இனங்காணப்படவில்லை என்பது ஆறுதல். இப்போது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, நாடு இயல்பு நிலைமைக்குத் திரும்புகின்றது.

ஆனால், நாட்டில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தோன்றும் என்று எச்சரித்துள்ளனர் சுகாதாரத் துறையினர். கொரோனா வைரஸ் இரண்டாம் அலை நாட்டின் வடக்கில் இருந்து தோன்றக்கூடும் என்று சுட்டியுள்ள அவர்கள், இரண்டாம் அலைக்கான தோற்றுவாய் இந்தியாவில் இருந்து வருவோராக இருக்கலாம் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவில் இப்போது கொரோனா பரவல் வேகம் அதிகரித்துள்ள நிலையில், தமிழகத்திலும் கொரோனா வைரஸ் தாக்கம் அச்சம்தரும் வகையில் உள்ளது. நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழக்கும் அளவுக்கு அங்கு கொரோனாத் தொற்று தீவிரம் பெற்றுள்ளது. தினந்தோறும் அங்கு புதிதாக ஆயிரக்கணக்கான கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். அயல்நாட்டின் இந்த நிலைமை இலங்கைக்கும் ஆபத்தானதே.

தமிழகத்தில் இருந்து படகு மூலம் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் கடத்தல்களால், தமிழகத்தில் இருந்து கொரோனா வைரஸ் இங்கு காவப்படலாம். அதனால் சமூகத்துக்குள் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படலாம். அவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால், நினைத்துப் பார்க்கமுடியாத அழிவை எதிர்கொள்ள நேரிடும்.

இதைத் தடுக்கும் பொறுப்புக் கடற்படையினருக்கே உண்டு. வடக்குக்கடல் பரப்புக்குள் வைத்துப் போதைப் பொருள்கள் கைப்பற்றப்படுவது, தனது பொறுப்பை கடற்படை சரியாகச் செய்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகின்றது. கடற்படையினரின் கண்காணிப்பை மீறி வடக்குக் கடற்பரப்புக்குள் கடத்தல்காரர்கள் ஊடுருவ முடிகின்றமை பெரும் ஆபத்தானது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதக் கப்பல்களை இனங்கண்டு அழித்ததாகக் கூறிக்கொள்ளும் கடற்படையால், இந்தப் போதைப்பொருள் கடத்தல்களை ஏன் முற்றாகத் தடுத்து நிறுத்த முடியாதுள்ளது?.

நாட்டில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தோன்றும் என்றும், தமிழகத்தில் இருந்து எவரேனும் வந்தால் அறிவியுங்கள் என்றும் வெறுமனே எச்சரிக்கைகளையும், அறிவுறுத்தல்களையும் மக்களுக்கு வழங்கிவிட்டு அரசாங்கமும், அதிகாரிகளும் ஒதுங்கிக்கொள்ள முடியாது, செயலாற்ற வேண்டும். வடக்குக் கடலில் கடற்படை தனது கண்காணிப்பை இறுக்குவது அவசியம். அசம்பாவிதம் நடந்தபின்னர் அதை மக்களின் தலைகளில் கட்டுவதை விடுத்து, தங்கள் பொறுப்புணர்ந்து நிலைமையின் தீவிரம் உணர்ந்து அவர்கள் செயலாற்றுவது அவசியம். வரும் முன் காத்தலே சிறந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

# நயினைக்கு ‘பாஸ்’ நடைமுறை; நீக்கக் கோரி மனு கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 26**

**நயினாதீவில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கும், நயினாதீவுக்குள் செல்வதற்கும் தற்போது நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ள பாஸ் நடைமுறையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள் அதற்கான தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி, யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு கடிதம் ஒன்றை நேற்று கையளித்தனர்.**

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

இந்த விடயத்தைத் தாங்கள் கருத்தில் எடுத்து, பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று தாழ்மையுடன் கோருகின்றோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பித்துத் தற்போது நடைபெற்றுவருகின்றது. நாட்டில் தற்போது காணப்படும் கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி, பெருந்திருவிழாவில் பக்தர்கள் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்களே திருவிழாவில் கலந்துகொள்ள முடியும் என்று சுகாதாரத் தரப்பினரும், பொலிஸாரும் அறிவுறுத்தியுள்ளனர். பெருந்திருவிழாவில் குறிப்பிட்ட எண்ணிக்கையான பக்தர்களே கலந்துகொள்ளலாம் என்று அறிவித்துள்ள பொலிஸார், நயினாதீவில் இருந்து வெளிச் செல்வதற்கு நயினாதீவுப் பொலிஸாரிடம் “பாஸ்” பெற வேண்டும் என்ற நடைமுறையை விதித்துள்ளனர். பிற இடங்களில் இருந்து நயினாதீவுக்கு வேறு தேவைகளுக்காகச் செல்லும் மக்களுக்குத் தடைகளை ஏற்படுத்த முனைந்துள்ளனர். இந்த நடைமுறையால் நேரவிரயம் ஆவதுடன், குழந்தைகளுடன் செல்வோரும், வயது முதிர்ந்தோரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நயினாதீவுக்குச் செல்வதற்கான பேருந்துகளில் குறிகாட்டுவான் செல்லும் மக்கள், திருப்பி அனுப்பப்படுகின்றனர். தனியார் தொழில் துறையினர் மற்றும் தனிப்பட்ட தேவைக்காகச் செல்வோரும், நயினாதீவைச் சொந்த இடமாகக் கொண்டவர்களும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தெற்கில் இருந்துவரும் பெரும்பான்மை இன மக்களிடம் பொலிஸார் இந்த நடைமுறைகள் எவற்றையும் பின்பற்றுவதில்லை. அவர்கள் நேரடியாகக் குறிகாட்டுவான் சென்று அங்கிருந்து நயினாதீவு செல்கின்றனர். நயினாதீவு செல்லும் பெரும்பான்மையின மக்கள் விகாரையில் வழிபாடு செய்வதுடன், நயினை நாகபூசணி அம்மன் ஆலயமும் செல்கின்றனர். கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த பெருந் திருவிழாவில் பக்தர்கள் கலந்துகொள்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதனால் பாஸ் நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறும் பொலிஸார், பெரும்பான்மையின மக்கள் தொடர்பில் கண்டும் காணாதும் இருக்கின்றனர். பொலிஸாரின் பாரபட்சமான இந்த நடவடிக்கைகள் தொடர்பாக தங்களின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம் என்றுள்ளது. (ப)

# 15ஆயிரம் பட்டதாரிகளை தொழில் பயிலுநராக இணைக்க அனுமதிக்குக

## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கல்வி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 26

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் சேவையாற்ற 15 ஆயிரம் பட்டதாரிகளை தொழில் பயிலுநர் அடிப்படையில் இணைத்துக்கொள்ள தேர்தல் ஆணைக்குழு அனுமதி வழங்க வேண்டும்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பங்குபற்றும் மேலதிக வகுப்பு, பரீட்சைக்கான கருத்தரங்கில் ஒரு வகுப்பில் 500 மாணவர்கள் இருப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை அமைச்சரவையில் முன்வைத்துள்ளேன் என்று கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பு வழங்குதல் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய பட்டதாரிகளுக்கு தொழில் நியமனங்கள், மற்றும் பயிற்சி வழங்கும் நடடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி தொடக்கம் தொழில் நியமனக் கடிதங்கள் அரச நிர்வாக சேவை அமைச்சின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டன. பொதுத்தேர்தலுக்கான திகதி குறிப்பிட்டுள்ளதால் தொழில் நியமனங்களை தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மார்ச் மாதம் 2 ஆம் திகதி குறிப்பிட்டது. இதனால் நியமனங்கள் வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டன. அதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 47ஆயிரம் பேருக்கு தொழில் பயிற்சி நியமனக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.மேலும் 7 ஆயிரம் பேருக்கான நியமனக் கடிதங்களை அனுப்பிவைக்க வேண்டியுள்ளது.

பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. மாணவர்களின் பாடத்திட்டத்தை விரைவாகப் பூர்த்தி செய்யவேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. இலங்கையில் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் ஆசிரியர்கள் விடுமுறையில் உள்ளனர், மேலும் 10 ஆயிரம் பேர் வெளிக்கள கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு ஒரு நாளைக்கு 60 ஆயிரம் ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகம் தருவது இல்லை. இந்நிலை எதிர்வரும் நாள்களில் தொடர்ந்தால் கல்வி நடவடிக்கைகளில் மேலும் பாதிப்புச் செலுத்தும். பாடசாலைக்குச் சமூகம் தராத ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்பவே 15 ஆயிரம் பட்டதாரிகளை இரண்டு வருட கால ஒப்பந்த அடிப்படையில் பயிலுநர் சேவையில் இணைத்துக்கொள்ள கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. அரசியல் காரணிகளை பின்னணியாகக் கொள்ளாமல் பொதுக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் ஆணைக்குழு இதற்கு அனுமதி வழங்க வேண்டும்- என்றார். (ஐ)

# வீதியோரங்களில் கழிவுகளை வீச வேண்டாம்

நல்லூர்,ஜூன் 26
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதியோரங்கள் மற்றும் பொதுஇடங்களில் திண்மக் கழிவுப் பொருள்களை வீச வேண்டாம்.
சபையின் அறிவுறுத்தல்களை மீறி வீதிகளில் கழிவுப் பொருள்களை வீசுவோருக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதேச சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார்.
வீதியோரங்கள் மற்றும் பொது இடங்களில் திண்மக் கழிவுகளை வீசுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது. இதனால் தொற்று நோய்களும் ஏற்படலாம்.
மக்கள் தமது குடியிருப்புக் கழிவுகளை உரிய முறையில் தரம் பிரித்து அவற்றை வீடுவீடாகச் சேகரிக்க வருகை தரும் கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்க வேண்டும்.
சேகரிக்கும் கழிவுகளை பொது இடங்கள் வீதியோரங்களில் வீசு வேண்டாம் எனவும் பிரதேச சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-17)

# முல்லைத்தீவில் வறட்சியால் 2,416 குடும்பங்கள் பாதிப்பு

## மாவட்ட செயலர் தகவல்

**முல்லைத்தீவு, ஜூன் 26**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் 2 ஆயிரத்து 416 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
வெலிஓயா பிரதேசத்தில் 430 குடும்பங்களைச் சேர்ந்த 1,540 பேரும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 1,986 குடும்பங்களைச் சேர்ந்த 6,398 பேரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன.
இதற்கமைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு 5 இலட்சம் ரூபாவும், வெலிஓயா பிரதேசத் துக்கு 3 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன- என்றார். (ஐ)



# விவசாய நவீனமயமாக்கல் தெளிவூட்டல் கருத்தரங்கு

வவுனியா, ஜூன் 26
விவசாய நவீனமயமாக்கல் திட்டம் தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு வவுனியா மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
இதன்போது விவசாயிகள், கமக்கார அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், தொழில் முயற்சியாளர்கள் ஆகியோருக்கு தெளிவூட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது.
இக் கருத்தரங்கில் சமூக பாதுகாப்பு ஆலோசகர் கலாநிதி ஜின்னா மற்றும் வடமாகாண நவீன விவசாய மயமாக்கல் திட்ட உத்தியோகத்தர் மகிந்தன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். (ஐ-110)

# கப்பல்களில் பணியாற்ற வெளிநாட்டவர் வரத் தடை

கொழும்பு,ஜூன் 26
இலங்கை கடற்பரப்பில் கப்பல்களில் பணியாற்றுவதற்காக வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வருபவர்களுக்கு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
கப்பல் பணியாளர்களான வெளிநாட்டவர்கள் வருகைதரும் செயற்பாட்டை உடன் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.
அவ்வாறு வரும் வெளிநாட்டவர்களில் குறிப்பிடத்தக்க அளவிலானோர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.
கடந்த நாள்களாக அவ்வாறு வந்தவர்கள் பலர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.
இதன் காரணமாக உடன் அமுலுக்கு வரும் வகையில் உடனடியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (க)

# காலநிலை மாற்றத்தால் மீன்பிடித் தொழில் பாதிப்பு

மன்னார், ஜூன் 26
காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் தென் கடல் பகுதியான முத்தரிப்புத்துறை -சிலாபத்துறை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக மீனவர்கள் கருத்து தெரிவித்ததாவது;
வழமையாக ஆறாம்மாதம் நல்ல காற்று வீசும் காலம் காற்று வீசும் போதுதான் ஆழ்கடல் மீன்கள் கரையை நாடி வரும். ஆனால் தற்போது காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எரிபொருள் செலவுகளுக்குக் கூட மீன்கள் கிடைப்பதில்லை இதனால் மீனவர்கள் கடனாளியாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
வழமையான நாள்களில் இந்தக் காலப்பகுதியில் விளை மீன்கள் குவிந்து கிடக்கும். தற்போது ஒரு மீனவர் படகில் இரண்டு கிலோ விளைமீன் பிடிபடுவதே கடினமாக உள்ளது" என்றனர். (ஐ-213)

# திருடிய பணத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்த நபர்

கொழும்பு, ஜூன் 26
திருடிய பணத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்த சுவாரஸ்ய சம்பவம் மொனராகலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.
சில தினங்களின் முன்னர் இளம் பெண்ணொருவரும், கணவரும் அடைவு வைத்து பெறப்பட்ட ஒரு தொகைப்பணத்துடன் வீடு திரும்பியுள்ளனர்.
வழியில் உணவகம் ஒன்றின் முன்பாக முச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு, மதிய உணவு கட்டிக் கொண்டு மீள முச்சக்கர வண்டியில் ஏறியபோது, முச்சக்கரவண்டியில் வைக்கப்பட்ட பணம் அடங்கிய கைப்பை திருடப்பட்டிருந்தது.
இது தொடர்பில் மொனராகலை பொலிஸாரிடம் முறையிடப்பட்டது.
உணவகத்தில் விசாரணை நடத்திய பொலிஸார், அங்கிருந்த சி.சி.ரி.வி கமராவை ஆய்வு செய்தனர். அதில் பணத்தை திருடியவர் தொடர்பான தகவல்கள் கிடைத்தன.
இந்த நிலையில், பணத்தை திருடியவர் மொனராகலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து, திருடிய பணத்தை மீள ஒப்படைத்தார். தனிப்பட்ட பணத்தேவை இருந்த நிலையில், முச்சக்கர வண்டிக்குள் பணத்தை அவதானித்து அதை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார். (க)



# வவுனியா முகாம்களில் 284 பேர் தனிமைப்படுத்தல்

வவுனியா, ஜூன் 26
அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து அழைத்து வரப்பட்ட 284 பேர் வவுனியாவில் அமைந்துள்ள இரு தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
அமெரிக்காவில் இருந்து அழைத்துவரப்பட்ட 184 பேர் பெரியகட்டு இராணுவ முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திலும்-
சிங்கப்பூரில் இருந்து அழைத்து வரப்பட்ட 100 பேர் வவுனியா, பம்பைமடு இராணுவ முகாமிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு இரு தனிமைப்படுத்தல் முகாம்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ள 284 பேரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளமையுடன், அவர்களிடம் பி.சி. ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-18)

# ரணிலுக்கு வழங்கும் வாக்குகள் பெரமுனவுக்கே சென்றடையும்!

## வேலுகுமார் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 26
ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அணியினருக்கு அளிக்கப்படும் வாக்குகள் இறுதியில் ராஜபக்ஷக்களின் வாக்கு வங்கிக்கே சென்றடையும். எனவே, மக்கள் மதிநுட்பத்துடன் வாக்குரிமையைப் பயன்படுத்தவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
2019ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பெரும் இழுத்தடிப்புக்கு மத்தியில் இறுதிக் கட்டத்திலேயே சஜித் பிரேமதாசவை வேட்பாளராக அறிவிப்பதற்கு ரணில் தரப்பு நடவடிக்கை எடுத்தது. இக்காலப்பகுதிக்குள் மொட்டுக் கட்சியினர் கீழ்மட்டங்களில் பிரசாரங்களை முடித்திருந்தனர். அதாவது ராஜபக்ஷ தரப்பு பாதித்தூரம் ஓடிய பின்னரே, சஜித்துக்கு ஓட்டத்தையும், தேர்தல் ஆட்டத்தையும் ஆரம்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. திட்டமிட்ட அடிப்படையில் காலைவாரி, கழுத்தறுப்புச் செய்யும் வகையிலேயே ரணிலும், அவரின் சகாக்களும் இறுதிவரை காலத்தைக் கடத்தினர். பிரசாரங்களின் போதுகூட துரோகங்களே கட்டவிழ்த்துவிடப்பட்டன. முன்கூட்டியே சஜித்தை வேட்பாளராக அறிவித்து, அவரின் வெற்றிக்காக ரணில் அணியும் உண்மையாக உழைத்திருந்தால் வெற்றி சாத்தியமாகியிருக்கும். பொறுப்பற்ற விதத்தில் வேண்டுமென்றே சில அறிவிப்புகளை விடுத்து, ராஜபக்ஷக்களுக்கு மறைமுகமாக ஒத்துழைப்பை வழங்கியதாலேயே முடிவுகள் மாறின. இம்முறையும் சஜித்தை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதற்கும், புதிய கூட்டணியின்கீழ் போட்டியிடுவதற்கும் அனுமதி வழங்கிவிட்டு, இறுதி நேரத்தில் ரணில் குழு குத்துக்கரணம் அடித்தது. சஜித் தலைமையிலான கூட்டணி பலமடைந்துவந்ததாலும், தேர்தலில் மக்கள் அமோக ஆதரவை வழங்குவார்கள் என்பதாலுமே ரணில் தரப்பைமஹிந்த அணிகுத்தகைக்கு வாங்கி தற்போது சில நாடகங்களை அரங்கேற்றிவருகின்றது - என்றார். (ப)

# வடக்கின் கல்வி வீழ்ச்சிக்கு காரணம் மாணவர் வரவு குறைந்தமையே!

## ஆளுநருடனான கலந்துரையாடலில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம். ஜூன் 26

**வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த கால கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களில் முதன்மையானது மாணவர்களின் வரவு குறைவே என்று வடக்கு கல்விப் பிரிவினரும் அதிபர்களும் வடக்கு ஆளுநருக்கு கூறியுள்ளனர்.**

கொரோனா விடுமுறையின் பின்னர் மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி சம்பந்தமாகவும் வடக்கு ஆளுநரின் தலைமையில் கலந்துரையாடல் யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர்கூடத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாணத்துக்குட்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண கல்வி வீழ்ச்சிக்கான காரணங்கள் ஆராயப்பட்டன. அதன்போதே மேற்கண்ட காரணம் முன்வைக்கப்பட்டது.

வலிகாம கல்வி வலயத்தின் கடந்த கால கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வருடம் குறைவடைந்தமைக்கு முக்கிய காரணங்களில் ஒன்று மாணவர்களின் வரவின்மையே என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. பெரும்பாலும் பெற்றோர் தமது வறுமை காரணமாக பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துகின்றனர். இதனால் மாணவர்கள் குறைவான நாள்களே பாடசாலைக்கு வருகை தருகின்றனர். எனினும், அவர்களின் கல்வி உரிமையின் பால் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் பெறுபேறுகள் மிக மந்தமான நிலையை அடைந்துள்ளன.

பெறுபேற்றின் தாக்கம் அந்தந்த பாடசாலைகள் மற்றும் வலயங்கள் மீதும் தாக்கம் செலுத்துகின்றன. இது வடக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்தக் கல்வி வளர்ச்சியிலும், எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்துகிறது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்றமை சட்டத்தின்படி குற்றம் என்பதால் அதற்கு எதிராக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக நடவடிக்கை மேற்கொள்வது பற்றி ஆராயப்பட்டது.

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்பாது வேலைக்கு அமர்த்தும் வறுமைக்கோட்டுக்குள் வாழும் குடும்பங்களுக்கு அரசு வழங்கும் வாழ்வாதாரங்கள் மற்றும் உதவிகளை இடைநிறுத்துவதற்கும் பிரதேச செயலகத்தினூடாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தும் 'சூம்' காணொலி மூலமான கற்பித்தல் முறைமை மாணவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளமையால் தொடர்ந்தும் அதனை முன்னெடுப்பது எனத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ந)

# விபத்தில் காயப்பட்டவர் நேற்று சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

**விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.**

இணுவிலைச் சேர்ந்த செல்லர் இரத்தினம் (வயது 78) என்பவரே உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாலை அவர் வீதியைக் கடந்தபோது முச்சக்கரவண்டி மோதியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அந்த இடத்திலேயே மயங்கிய அவரை, அங்கு ஒன்றுகூடியவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்திருந்தனர்.

எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 26

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** பொக்யாட் முல்லை, சுன்னாகம் சிவன் கோவில் பிரதேசம், சுன்னாகம் சிவன் கோவிலிலிருந்து கொத்தியாவத்தை இந்துமயானம் வரை, சுன்னாகம் மலப்பை, சூராவத்தை, ஏழாலை, குப்பிளான், கட்டுவன், சுன்னாகம் ஸ்ரீலங்கா றெலிக்கொம் ஆகிய இடங்களிலும். **வவுனியா மாவட்டத்தில்** கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, இராஜேந்திரன் குளத்திலிருந்து உளுக்குளம் வரையும் **மன்னார் மாவட்டத்தில்** மாலுவாடி பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# மாமனிதர் ரவிராஜின் பிறந்ததின நினைவேந்தல்





சாவகச்சேரி, ஜூன் 26

யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 58 ஆவது பிறந்ததின நினைவேந்தல் சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக வுள்ள அவரது உருவச்சிலையடியில் நேற்று நடைபெற்றது.

அமரரின் மனைவியும் யாழ்ப்பாண மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளருமான திருமதி சசிகலா ரவிராஜ் பொதுச் சுடர் ஏற்றித் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியனவற்றின் முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், ரவிராஜின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (த-9,159)

செங்கடகல பினான்ஸ்

| காலம் | மாதாந்தம் | A.E.R | முதிர்வுறும் போது | A.E.R |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 8.00% | 8.30% |
| 3 மாதங்கள் | | | 8.25% | 8.51% |
| 6 மாதங்கள் | | | 8.50% | 8.68% |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 15 மாதங்கள் | 10.00% | 10.47% | 10.50% | 10.37% |
| 18 மாதங்கள் | 10.00% | 10.47% | 10.50% | 10.24% |
| 2 வருடங்கள் | 10.50% | 11.02% | 11.25% | 10.68% |
| 3 வருடங்கள் | 11.00% | 11.57% | 11.75% | 10.59% |
| 4 வருடங்கள் | 11.25% | 11.85% | 11.75% | 10.11% |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

செங்கடகல பினான்ஸ்
உங்கள் சேமிப்பிற்கு உயர் வட்டி வீதத்தையும் VISA டெபிட் கார்ட்டினையும் வழங்குகின்றது.
6.25%

| காலம் | மாதாந்தம் | A.E.R | முதிர்வுறும் போது | A.E.R |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 8.00% | 8.30% |
| 3 மாதங்கள் | | | 8.25% | 8.51% |
| 6 மாதங்கள் | | | 8.50% | 8.68% |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 15 மாதங்கள் | 9.50% | 9.92% | 10.00% | 9.88% |
| 18 மாதங்கள் | 9.50% | 9.92% | 10.00% | 9.77% |
| 2 வருடங்கள் | 10.00% | 10.47% | 10.75% | 10.23% |
| 3 வருடங்கள் | 10.50% | 11.02% | 11.25% | 10.18% |
| 4 வருடங்கள் | 10.75% | 11.30% | 11.25% | 9.73% |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

*நிபந்தனைகளுக்குட்பட்டது

விபரங்களை அறிய: 077 3 090 370 077 4 789 212 076 3 770 932

FITCH RATINGS SL BBB-(lka)

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு 20.12.1968. 2011 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது. நிறுவனப் பதிவு இல. PB 238 PQ
பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 375 780 மின்னஞ்சல்: info@senfin.com Web: www.senfin.com

# 3 மாத கால மின் பட்டியலே தற்போது வழங்கப்படுகின்றது

## முன்னைய நிலுவை செலுத்தியிருப்பின் கழிபடும் மின்சார சபை தெளிவுபடுத்தல்

வவுனியா, ஜூன் 26

**தற்போது மின்மானியில் உள்ளவாறு 3 மாதங்களுக்கான மின் பட்டியல் வழங்கப்படுகின்றது. எனவே, முன்னர் வழங்கப்பட்ட உத்தேச மின்பட்டியல் பணத்தைச் செலுத்தத் தேவையில்லை. ஏற்கனவே முன்னைய உத்தேச பட்டியலுக்கு பணம் செலுத்தியவர்களின் தொகை தற்போதைய பட்டியலில் கழிக்கப்படும்.**

இவ்வாறு வவுனியா மாவட்ட பிரதான மின் பொறியியலாளர் திருமதி மைதிலி தயாபரன் தெரிவித்தார்.

வவுனியாவில் மின்பாவனையாளர்களுக்கு இரண்டு மின்சார பட்டியல் வழங்கி அதிகரித்த கட்டணம் அறவிடப்படுவதாகக் குற்றஞ்சாட்டிய பாவனையாளர்கள் அதற்குத் தீர்வுகேட்டு அங்குள்ள மின்சார சபை அலுவலகம் முன்பாக நேற்று ஒன்றுகூடினர்.

கொவிட் 19 தாக்கம் காரணமாக நாடு முடக்கத்துக்குள் இருந்த காலப் பகுதியில் மின்சார சபையால் ஒரு மின்சார பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. அதில் முன்னைய மாத மின் பட்டியல் தொகையே அடுத்த மாதத்துக்கும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை பலர் செலுத்தியுள்ளோம்என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் தற்போது மீண்டும் ஒரு மின்சாரப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. அதில் மூன்று மாத மின்பட்டியல் எனக் கூறி அறவீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே ஒரு மாத மின்பட்டியல் தரப்பட்ட நிலையில் மீண்டும் அந்த மாதத்துக்கும் சேர்த்து மின்பட்டியல் வழங்கி மின்சார சபையினர் மக்கள் பணத்தை சுரண்டுகின்றனரா என்று அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

இது பற்றிக் கேட்டபோது பிரதான மின் பொறியியலாளர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

"மின்சார சபை நாடு முடக்கத்துக்குள் இருந்த காலப்பகுதியில் தற்காலிகமாக ஒரு மின்சாரப்பட்டியலை வழங்கி இருந்தது. அதில் முன்னைய மாத மின்பட்டியலை அடிப்படையாக கொண்டு உத்தேச அறவீடே குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது மின்மானியில் உள்ளவாறு 3 மாதங்களுக்கான மின் பட்டியல் வழங்கப்படுகின்றது. எனவே, முன்னர் வழங்கப்பட்ட உத்தேச மின்பட்டியல் பணத்தை செலுத்தத் தேவையில்லை. ஏற்கனவே முன்னைய உத்தேச பட்டியலுக்கு பணம் செலுத்தியவர்களின் தொகை தற்போதைய பட்டியலில் கழிக்கப்படும்" - என்று மேலும் தெரிவித்தார். (த-18)

# வனவள அதிகாரிகள்தான் குடியமர முட்டுக்கட்டை

## முன்னாள் எம்.பி. ஆனந்தன் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 26

வவுனியா காஞ்சிரமோட்டை கிராம மக்களின் மீள் குடியமர்வுக்கு வனவளத்திணைக்கள அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுகின்றனர் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட காஞ்சிரமோட்டை மற்றும் நாவலர் கிராம மக்கள் மீளக்குடியமர வனவள அதிகாரிகள் தடையாக இருக்கின்றனர் என்றுகூறி கடந்த 21ஆம் திகதி தொடக்கம் கவனவீர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கைவிடப்பட்ட தமது காணிகளில் வாழ்வாதாரத்துக்காக பயிர் செய்கையில் ஈடுபடுவதற்கும் வனவள திணைக்கள அதிகாரிகள் தடைபோட்டு வருகின்றனர். அவர்கள் தமது சொந்த நிலங்களில் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு எதிராக நீதிமன்றில் மக்களை நிறுத்துவதற்கான முயற்சிகளை வனவள திணைக்கள அதிகாரிகள் முன்னெடுக்கின்றனர். மின் இணைப்பையும் தடுத்து நிறுத்தியுள்ளனர். அதிகாரிகளின் இத்தகைய முறையற்ற நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டிய போதும் பயனளிக்கவில்லை. ஜனாதிபதி இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (த-18)



# உபஉணவுப் பயிர்கள் மக்களுக்கு அன்பளிப்பு

கரணவாய், ஜூன் 26

உப உணவுச் செய்கை ஊடாக பசுமைப்புரட்சியை ஏற்படுத்த கன்பொல்லை மக்கள் ஒன்றியம் உப உணவுப் பயிர்களின் நாற்றுக்களை வழங்கியுள்ளது. இவற்றை வழங்கும் நிகழ்வு கரவெட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், விவசாய போதனாசிரியர், கரவெட்டி மேற்கு கிராம அலுவலர் மற்றும் பசுமைப் புரட்சி இயக்க அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். (த-108)

# ஏ-9 வீதியில் பயணித்த வாகனங்களில் சுகாதார சோதனை

கொடிகாமம், ஜூன் 26

கொரோனா தடுப்பு வாரத்தையொட்டி கொடிகாமம் ஏ9 வீதியில் பேருந்துகள் நேற்று வியாழக்கிழமை கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு முன்பாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சுகாதார நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன.

கொடிகாமம் பொலிஸ் அலுவலர்கள், சாவகச்சேரி பிரதேச சபையினர் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து முகக்கவசம் அணிவதன் அவசியம் பேருந்தின் இருக்கை மட்டத்துக்கு பயணிகளை ஏற்றுதல் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்கினர். (த-159)

# நாற்புற ஓலை அடைப்புக்குள் கசிப்பு காய்ச்சியவர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 26

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரத்தில் வீட்டுக்காணியில் நீண்டகாலமாக கசிப்பு காய்ச்சி வந்தமை கண்டறியப்பட்டதோடு, அங்கு கசிப்பு காய்ச்சி வந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தனது வீட்டுக் காணிக்குள் கசிப்பு காய்ச்சும் இடத்தை தென்னை ஓலைகளால் நான்கு புறமும் மறைப்பு கட்டி உடல் நலத்துக்கு தீங்கான கசிப்பு பானத்தை காய்ச்சி வந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 20 லீற்றர் கசிப்பு, 180 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சும் பானைகள் மற்றும் வயர்கள், பரல்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-19)

# இருட்டில் வெருட்டுகிறது குறுக்கு வீதி

கரணவாய், ஜூன் 26

கரணவாய் கிழக்கு விக்னேஸ்வரா வீதியையும் கலட்டி வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதியில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் அந்தப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது. இரவில் பயணிப்போர் அச்சத்துடன் பயணிக்கின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் தினமும் பெருமளவானோர் பயணம்செய்து வருகின்றனர். இந்த வீதியில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு நேரங்களில் தனியாக பயணம் செய்வது அச்சமாகவுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (த-108)

# அபிவிருத்தி பயிற்சி அலகு கிளிநொச்சியில் திறப்பு

## வடக்கு ஆளுநர் திறந்துவைத்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.



கிளிநொச்சி கனகபுரம் வீதியில் பல லட்சம் ரூபாவில் அமைக்கப்பட்ட வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகை வடக்கு மாகாண ஆளுநர் திறந்து வைத்தார்.

வடக்கு மாகாண பிரமாண அடிப்படையான மூலதன நன்கொடை மற்றும் மூலதன பெறுமதியான நன்கொடை மூலம் இது அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் நிதி ஆணைக்குழுவின் செயலாளர் டீ.பீ தென்னக்கோன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலர், வடக்கு மாகாண திணைக்களங்களின் செயலர்கள், திணைக்களங்களின் பணிப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-113)

# சுகாதார முறையில் மன்னாரில் இன்று வாக்கெண்ணல்

தலைமன்னார், ஜூன் 26

தேர்தல் வாக்குகள் எண்ணும் பணியின்போது சுகாதார முறைப்படி எவ்வாறு செயற்படுவது என்பது பற்றிய பரீட்சார்த்த செயற்பாடு மன்னாரில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஜெயிக்கா மண்டபத்தில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றன் தலைமையில் இது நடைபெறவுள்ளது. (த-60)



# களத்தில் அநேகர் இளைஞரே! நம்பி வாக்களிக்கலாம்!!

### அழைப்பு விடுக்கிறார் ரணில்

கொழும்பு, ஜூன் 26

நாட்டைப் புதுப்பிக்கக்கூடிய ஒரே கட்சி ஐ.தே.க. மாத்திரமேயாகும். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஆட்சி அதிகாரம் அத்தியாவசியமானதாகும். யாரும் பின்னடையத் தேவையில்லை. அனைவரும் எம்முடன் இணைந்து செயற்படுங்கள். எனத் தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , கட்சியை புதிய சந்ததியினருக்காக கட்டியெழுப்புவதைப் போன்று நாட்டையும் இளம் சந்ததிக்காக கட்டியெழுப்புவோம் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சியே பல புதிய வேட்பாளர்களைக் களமிறக்கியிருக்கிறது. இளைஞர்கள் புதுமுகங்களை எதிர்பார்த்துள்ளனர். பழைய அரசியல்வாதிகளுடைய செயற்பாடுகளில் அவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். எனவே தான் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் பெருமளவான புதுமுகங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். கட்சியும் புதிதாக்கியுள்ளதோடு புதிய வேலைத்திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசியலிலிருந்து விலகிய இளைஞர்களை மீண்டும் இணைத்துக்கொள்வது எமது பிரதான பொறுப்பாகும். அதனுடன் முன்னோக்கிச் செல்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. எம்மால் களமிறக்கப்பட்டுள்ள புதிய வேட்பாளர்களில் கல்வி கற்றவர்களே அதிகமாக உள்வாங்கப்பட்டுள்ளனர். பொதுஜன பெரமுனவைப் பற்றி நாம் பேசப் போவதில்லை. எமக்கு மாற்றம் தேவைப்படுகிறது. அதற்கு ஆட்சி அதிகாரம் அவசியமாகும். மாற்றத்துக்கான யோசனைகளை நாம் முன்வைக்கின்றோம். அதற்காக வாக்களித்ததன் பின்னர் விருப்பு வாக்கை வழங்குங்கள். மக்களின் குரல் களுக்கு நாம் செவி சாய்ப்போம் - என்றார். (ப)

# மஹிந்தானந்தவின் சர்ச்சைக் கருத்து சுயாதீனமான முறையில் விசாரணை

### விளையாட்டுத்துறை அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

**உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமே குறிப்பிட்டுள்ள சர்ச்சைக்குரிய செய்தி தொடர்பில் உறுதிப்படுத்தப்படாத செய்திகளைக்கொண்டு எத்தரப்பினரையும் குற்றவாளிகளாகச் சுட்டிக்காட்ட முடியாது. எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி சுயாதீனமான முறையில் விசாரணை நடவடிக்கை இடம்பெறுகின்றது என கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் வெற்றியை இலங்கை அணி இந்தியாவுக்கு தாரைவார்த்ததாக அப்போதைய காலகட்டத்தில் விளையாட்டுத் துறை அமைச்சராக பதவி வகித்த முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்ட செய்தி அனைத்துத் தரப்பிலும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்தக் கருத்து பாரதூரமானது. இவர் குறிப்பிட்டதைப்போன்று 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டியின் வெற்றி விற்கப்பட்டது என்பதை நான் தனிப்பட்ட ரீதியில் அறியவில்லை. அத்துடன் அக்காலகட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் எத்தரப்பினரும் நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டை சந்தேகத்தின் அடிப்படையில்கூட முன்வைக்கவில்லை.

மஹிந்தானந்த அளுத்கமகே சர்ச்சையை ஏற்படுத்தும் விதத்தில் குறிப்பிட்ட செய்தியைத் தொடர்ந்து அக்காலகட்டத்தில் விளையாட்டுத் துறை அமைச்சில் சேவையாற்றிய உயர்மட்ட அதிகாரிகளையும் தனிப்பட்ட முறையில் இவ்விடயம் தொடர்பில் வினவினேன். அவர்களும் ஆட்டநிர்ணயம் காட்டிக்கொடுக்கப்படவில்லை என்றே குறிப்பிட்டார்கள். அத்துடன் இவ்விடயம் தொடர்பிலும் ஐ. சி. சியிலும் விசாரித்தேன் அவர்களும் எவ்வித முறைப்பாடுகளும் இவ்வாறு கிடைக்கப்பெறவில்லை என்றே குறிப்பிட்டார்கள்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசாரணை நடவடிக்கைகள் எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லாமல் சுயாதீனமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன -என்றார். (ப)

# ரணசிங்க பிரேமதாஸவின் 96ஆவது பிறந்ததின நிகழ்வு

கொழும்பு, ஜூன் 26

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 96 ஆவது பிறந்த தின நிகழ்வு கொழும்பு 12 வாழைத் தோட்டம் சுசரித்த மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான ரஞ்சித் மத்தும பண்டார, ஏ.எச்.எம்.பௌஸி, திஸ்ஸ அத்தநாயக்க, சம்பிக்க ரணவக்க, ஹர்ஷ டி சில்வா ஆகியோரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-ரி2)

# கொரோனாவை ஒழிக்க வந்தது "மொபைல் அப்"

கொழும்பு, ஜூன் 26

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய 'மொபைல் அப்' (கையடக்கத் தொலைபேசி செயலி) ஒன்றை இலங்கை ஆராய்ச்சியாளர்கள் முதன் முறையாக உருவாக்கியுள்ளனர்.

'சுவரக்ஷா' என்ற பெயர் கொண்ட இந்த செயலி நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல்பீட வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவு பேராசிரியர் சந்தன ஜயரட்ண தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழு இந்த மொபைல் அப்பை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பில் பேராசிரியர் ஜயரட்ண தெரிவித்ததாவது:

இந்த செயலியைப் பொதுமக்கள் தம் கையடக்கத் தொலைபேசிகளில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதன் ஊடாக தனித்துவத்தைப் பாதுகாத்தபடி தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும். சுகாதாரத்துறை அதிகாரிகள் தரவுகளைப் பதிவேற்றியதும் பொதுமக்கள் இதன் ஊடாக எவ்வித அச்சமுமின்றி பொருளாதார மீளாய்வுகளில் ஈடுபடலாம். எவராவது ஒருவரை நீங்கள் பத்து மீற்றர் தூரத்துக்குள் அணுகும்போது உங்களது கையடக்கத் தொலைபேசி ஒரு வகையான ஒலி சமிக்ஞையை எழுப்பும். அதிர்வு ஏற்படும். நீங்கள் கொவிட்- 19 தொற்று தொடர்பிலான நபரை சந்தித்தால் அதனைக் குறிக்கும் வகையில் 5 வெவ்வேறு வர்ணங்களில் கையடக்கத் தொலைபேசியின் திரையில் அறிவிப்பு வெளிப்படும். கொவிட்- 19 தொற்றாளராயின் சிவப்பு நிறமும், அதிலிருந்து மீட்சி பெற்றவராயின் மஞ்சள் நிறமும், தனிமைப்படுத்தப்பட்டவராயின் கபில நிறமும், தனிமைப்படுத்தலைப் பூர்த்தி செய்தவராயின் பச்சை நிறமும் 14 முதல் 28 நாள்களுக்குள் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியவராயின் மஜந்தா நிறமும் வெளிப்படும். வரைபடத்தின் ஊடாக நீங்கள் பயணிக்கும் இடத்தின் ஆபத்து தன்மையை முன்கூட்டியே அறிந்து கொள்ளவும் வசதி உள்ளது. இந்த அப் பயன்பாட்டுடன் நாட்டின் சுற்றாலாத் துறையை மீளத்திறக்கலாம். இது இந்நாட்டின் வருமானத்தின் 13 வீதத்தைப் பெற்றுத்தரும். தனி நபர்களின் தனித்துவத்தைப் பாதுகாத்தபடி எந்தவொரு தொற்றுநோயையும் தணிக்கப் பயன்படும் பல்வேறு அம்சங்களுடன் உலகில் உருவாக்கப்பட்டுள்ள மிக மேம்பட்ட 'அப்' இதுவாகும் - என்றார். (ஐ)

# மேலும் 21 கடற்படையினர் தொற்றிலிருந்து குணமடைவு

கொழும்பு, ஜூன் 26

கொவிட்19 தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 21 கடற்படையினர் முழுமையாக குணமடைந்துள்ளனர்.

அவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த வேளையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகளுக்கு அமைய, அவர்களது உடலில் குறித்த வைரஸ் தொற்று மேலும் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து நேற்று முன்தினம் அவர்கள் மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளனர். இதன்படி கொவிட்19 தொற்றினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 811ஆக உயர்வடைந்துள்ளது. இதுவரை கொவிட்19 தொற்றால் 901 கடற்படையினர் பாதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் 811 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 90 கடற்படையினர் சிகிச்சைபெற்று வருகின்றனர் என கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ-ரி1)

# இனவாதத்தைக் கொண்டே அரசியல் செய்கிறது அரசு!

### சஜித் ஆதரவு அணி குற்றச்சாட்டு

திருகோணமலை, ஜூன் 26

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் ஆராய்ச்சிச் செயலணியில் தமிழரோ.முஸ்லிமோ நியமிக்கப்படா மைக்கான காரணத்தை அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் இம்ரான் மஹ்ரூப் , இனவாதத்தை முன்னி லைப்படுத்தி அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம் கருணா அம்மானின் ஊடாக மீண்டும் இனவாதச் செயற்பாடுகளைத் தூண்ட முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாது செயற்திறன் அற்ற அரசாங்கமாகப் பெயர் பெற்றுக் கொண்டுள்ளது. நியமனங்கள் உட்பட சலுகைகள் வரை அரசாங்கம் வழங்கிய எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக 5000 ரூபாவை சலுகையாக பெற்றுக் கொடுத்தாலும் , அதனை நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் ஊடாக மீண்டும் அறவிட்டுக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளின் காரணமாக மக்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் மீதான நம்பிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது.

தமிழர் சுதந்திர ஐக்கிய முன்னணியின் தலைவரான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு தேசியப்பட்டியலில் அனுமதி கொடுப்பதாக அரசாங்கம் அழைப்பு விடுத்ததாகவும், அவர் அதற்கு நன்றி தெரிவித்துவிட்டு, தேர்தலில் போட்டியிடவிருக்கி றேன் எனக் கூறினார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ப)

# கருணாவின் சர்ச்சைக் கருத்து; சி.ஐ.டியின் விசாரணை தீவிரம்

கொழும்பு, ஜூன் 26

**கருணா அம்மான் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் மன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.**

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சிறப்பு விசாரணைப் பிரிவின் முதலாம் இலக்க விசாரணை அறையின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயாகல தன்னை விசாரணை அதிகாரியாக அடையாளப்படுத்தி இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.



இலக்கம் 964/2, பன்னிபிட்டிய வீதி, ஜாதிக ஹெல உறுமய, பத்தரமுல்ல எனும் முகவரியைச் சேர்ந்த ஹெடில்லே விமலசார எனும் தேரர் பொலிஸ்மா அதிபருக்கு அளித்த முறைப்பாடு குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயாகல அந்த அறிக்கை ஊடாக நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

அம்பாறை நாவிதன்வெளி பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தின்போது தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்த கருத்துக்கள் அடங்கிய ஒலிப்பதிவைத் தனியார் ஊடகம் ஒன்றிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நீதிமன்ற உத்தரவையும் குற்றப்புலனாய்வுப் பிரிவு பெற்றுக்கொண்டுள்ளது. அந்தத் தனியார் தொலைக்காட்சி ஊடகத்திடம் உள்ள செம்மைப்படுத்தப்படாத அந்தச் சர்ச்சைக்குரிய கருத்து அடங்கிய முழுமையான பதிவை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்க கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, கடந்த செவ்வாய்க்கிழமை தனக்கு சுகயீனம் காரணமாக விசாரணைக்கு சமூகமளிக்க முடியவில்லை எனவும் சுகம் பெற்றதும் வருகிறேன் எனவும் சட்டத்தரணி தனது ஊடாகக் கருணா அம்மான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு அறிவித்திருந்தார்.

கருணா அம்மான் வெளியிட்டுள்ள, சர்ச்சைக்குரிய கருத்து, அதன் உள்ளடக்கத்தின் உண்மைத்தன்மை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சிறப்புக்குழு விசாரணைகளை கடந்த 3 தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது.

பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வெதிசிங்கவுக்கு விடுத்துள்ள விசேட உத்தரவுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் இரு குழுக்கள் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளுக்குச் சென்று, கருணா அம்மான் தொடர்பான சர்ச்சைக்குரிய விடயங்களை வெளிப்படுத்திய நிகழ்வு தொடர்பிலும் அதில் பங்கேற்றவர்கள் தொடர்பிலும் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்து வாக்குமூலங்களை பதிவு

# தேர்தல் விதிமுறையை மீறி செயற்படுகின்றார் மஹிந்த

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 26

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் சட்ட விதிகளுக்குப் புறம்பாகச் செயற்படுகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர் துஷார இந்துனில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு அவதானம் செலுத்த வேண்டும். இது தொடர்பாகக் கடிதம் அனுப்ப உள்ளோம். சிறிலங்கா பொதுஜன முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு வரும்போது அரச சொத்துக்களை முறையற்றுப் பயன்படுத்துகின்றார்.

அரசாங்கம் சார்ந்த வேலைத்திட்டம் ஒன்றுக்காக இல்லாது தனது தனிப்பட்ட தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச சொத்துக்களைப் பயன்படுத்துவது தேர்தல் சட்டவிதிகளுக்கு அமைய முறைகேடான செயற்பாடாகும். இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவுள்ளோம்.

அவருடன் வரும் பெருந்தொகையான பாதுகாப்புப் படைகள் மற்றும் வாகனங்களால் முழு வீதியும் மூடப்பட்டது. அவருடன் வந்த வாகனங்கள் அனைத்தும் தனிப்பட்ட வாகனங்களா?, பாதுகாப்புப் படையினர் தனியார் நிறுவனங்களுக்கு இணங்கச் செயற்படுபவர்களா? என்பது தொடர்பாகவும் ஆராய வேண்டும் என்று ஆணைக்குழுவிடம் கோரவுள்ளோம். அவருடன் வந்த வாகனங்களுக்கான எரிபொருள் பாவனை உள்ளிட்ட பாவனைச் செலவுகளை அவரது தனிப்பட்ட நிதியிலிருந்தா மேற்கொண்டார் என்பது தொடர்பாகவும் ஆராய்ந்து பார்க்குமாறு கோரியுள்ளேன்- என்றார். (எ)

## பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு 28,000 ரூபா கடன்

கொழும்பு, ஜூன் 26

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட 13 ஆயிரத்து 861 வியாபாரங்களுக்கு 28 ஆயிரம் ரூபா தொகையுடைய கடன்களை 4 சதவீத சலுகை வட்டியில் வழங்குவதற்கு மத்திய வங்கி அனுமதியளித்துள்ளது.

இத் திட்டத்தின் முதலாம் கட்டத்தின்கீழ் 13 ஆயிரத்து 861 கடன் விண்ணப்பங்களுக்காக 27.9 பில்லியன் ரூபா தொகைக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வரை நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட 7 ஆயிரத்து 274 வியாபாரங்கள் மத்தியில், 14.8 பில்லியன் ரூபாவை ஏற்கனவே பகிர்ந்தளித்துள்ளன.

இந்தக் கடன்கள் 6 மாத சலுகைக் காலத்துடனும், 24 மாதங்களைக் கொண்ட மீள்கொடுப்பனவு காலத்துடனும் கூடிய ஆண்டுக்கு 4 சதவீத சலுகை வட்டி வீதத்தைக் கொண்டவையாகும். இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆண்டுக்கு 4 சதவீத சலுகை வீதத்தில் மீள்கடன் வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு ஆண்டுக்கு 1 சதவீத சலுகை வீதத்தில் மேலும் 120 பில்லியன் ரூபாவை வழங்குவதற்கு ஆயத்தமாகவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஐ)

## உணவு உட்கொள்வதை குறைத்த இலங்கையர்!

யாழ்ப்பாணம், ஜூன் 26

கடந்த மே மாதத்தில் இலங்கையில் 30 சதவீதமான குடும்பங்கள் உணவு உட்கொள்ளும் அளவைக் குறைத்துள்ளன என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தகவல் வெளியிட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளை மையப்படுத்தி கடந்த மே மாதம் அந்த அமைப்பு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு உணவைக் குறைத்துக் கொண்ட குடும்பங்களில், 80 சதவீதமானவர்கள், இறைச்சி, மீன், முட்டை, பால் ஆகிய புரதச் சத்துள்ள உணவுகளைத் தவிர்த்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

அதேநேரம், அவர்களில் 54 சதவீதமானவர்கள், மரக்கறி மற்றும் பழங்களைத் தவிர்த்துள்ளனர். 30 சதவீதமான சிறுவர்கள் எந்தவகையான இரும்புச் சத்து உணவுகளையும் உட்கொள்ளவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறான நிலையில், தெற்காசிய நாடுகளின் அரசாங்கங்கள், நாட்டு மக்கள் வறுமை நிலைக்குள் தள்ளப்படுவதை தவிர்க்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் பிராந்திய பணிப்பாளர் ஜேன் கௌ தெரிவித்தார். (ஐ)




## சிங்கப்பூரில் சிக்கிய 94 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 26

கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து சிங்கப்பூரில் சிக்கித் தவித்த 94 பேர் விசேட விமானம் மூலம் நேற்றுமுன்தினம் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்கள் பி.சி. ஆர். பரிசோதனைகளின் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி2)

## கூட்டுத் தொழுகைக்கு 100 பேர்வரை அனுமதி



கொழும்பு, ஜூன் 26

ஜும்ஆ மற்றும் ஐவேளை கூட்டுத்தொழுகைகளுக்கு ஒரே நேரத்தில் 100 பேர் வரை கலந்துகொள்ள சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அமல் ஹர்ஷ டி சில்வா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழுகைகளின்போது கொவிட்19 பரவுவதைத் தடுக்கும் நோக்கில் சுகாதார அமைச்சால் விடுக்கப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி1)







# என்ன குற்றம் கூட்டமைப்பில்?

திருமுருகன்

நல்லாட்சி அரசு உருவாக்கத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்புக் காத்திரமானது. அதை வழங்கிய கூட்டமைப்பு நல்லாட்சி அரசிடமிருந்து அதற்குரிய பிரதிபலனை முழுமையாகப் பெறவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான வசைபாடல்களுக்கு முக்கிய காரணம் இதுவே. பிரதிபலனைப் பெற்றுக்கொள்ளாத கூட்டமைப்பு, தமிழர்களின் உரிமையை நல்லாட்சி அரசிடம் அடைவு வைத்துவிட்டது என்ற குற்றச்சாட்டு தற்போது முதன்மைப் படுத்தப்படுகின்றது. அது உண்மையில்லை என்பது தெரிந்திருந்தாலும், ஒரு பொய் திரும்பத் திரும்ப உண்மையைப் போல பலராலும் பல விதத்திலும் சொல்லப்படும்போது மக்கள் குழம்புவதில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

**ராஜபக்ஷக்கள் ஆட்சி**

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலோடு ராஜபக்ஷக்களின் ஆட்சி மலரத் தொடங்கியது. 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையில் அவர்களின் ஆட்சியில் முக்கியமாக இருந்தது போர். தமிழீழ விடுதலைப் புலிகளைத் துடைத்தொழிக்கின்றோம் என்று புறப்பட்ட அவர்கள், தமிழ் மக்களையே கொன்றொழித்தார்கள். வன்னிப் பெரு நிலப்பரப்பு குருதியில் குளித்த தேசமாக மாறியது. அதேநேரத்தில் குடாநாட்டிலும் காணாமல் ஆக்கப்படுதலும் வீதிக்கு வீதி சுட்டுப் படுகொலை செய்யப்படுதலும் வகைதொகையின்றி நடந்தேறின.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் ராஜபக்ஷக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். 2010ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரையில் அவர்களின் ஆட்சி தொடர்ந்தது. அந்தக் காலத்தில் என்ன நடந்தது? தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பாதுகாப்புத் தேவைக்காக வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்டன. மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அடக்கப்பட்டனர். தமிழர்கள் மூச்சு விடுவதற்கே முடியாத சூழல் தோற்றுவிக்கப்பட்டது. ஆயுதம் இல்லாத அடக்குமுறைப் போர் தொடுக்கப்பட்டது. ராஜபக்ஷக்களின் ஆட்சியை மனதில் மீண்டும் நிலை நிறுத்தினாலே ஈரற்குலை நடுங்கும். அப்படிப்பட்டது அவர்களின் ஆட்சி.

இப்போது 2019ஆம் ஆண்டுக்குப் பின்னரும் அவர்களின் ஆட்சி அவ்வாறே அமைந்திருக்கின்றது. ஆட்சிக்கு வந்த கையோடு, சுவிஸ் தூதரகப் பணியாளரின் கடத்தல், தமிழர்களின் கடத்தல்கள், கொலைகளை விசாரித்த அதிகாரிகள் தூக்கிப் பந்தாடப்படுதல், வடக்கில் மாத்திரம் மையப்படுத்தப்பட்டிருந்த இராணுவ மயமாக்கல் நாடு முழுவதும் நடக்கின்றது என்று ராஜபக்ஷக்களின் ஆட்சிக்குரிய 'ஸ்ரைல்' மீண்டும் வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது.

**கூட்டமைப்பின் பலம்**

"நல்லாட்சி அரசை அமைப்பதற்குப் பக்கபலமாக இருந்த கூட்டமைப்பு, அதை வைத்து தமிழர்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் தவறிவிட்டது. வரவு - செலவுத் திட்டத்தின் போதும் சரி, ஆட்சிக் கவிழ்ப்பின் போதும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய முறையில் பேரம் பேசவில்லை" என்ற பொத்தம் பொதுவான குற்றச்சாட்டை, கூட்டமைப்பின் வாக்கு வங்கியிலிருந்து தங்களுக்காக வாக்குகளை எதிர்பார்த்திருக்கும் எல்லாக் கட்சிகளும் முன்வைக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும்போது நிபந்தனைகளை முன்வைக்கவில்லையா? நிபந்தனைகளை முன்வைக்கவில்லை என்று சொல்பவர்கள் தங்களிடம் மனச்சாட்சி என்ற ஒன்று இருந்தால் அதைத் தட்டிக் கேட்டுப் பார்க்கட்டும். ஒவ்வொரு முறையும் எழுத்துமூலமான நிபந்தனைகளை விதித்து அவற்றுக்கு ஆட்சித் தலைவர்களின் ஒப்பங்களையும் பெற்றது கூட்டமைப்பு. தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளாக என்னென்ன விடயங்களைக் கூறுகின்றார்களோ அத்தனை விடயங்களையும் நிபந்தனைகளாக விதித்துத்தான் கூட்டமைப்பு

நல்லாட்சி அரசுக்கான ஆதரவை கூட்டமைப்பு விலக்கினால் ராஜபக்ஷக்கள்
தான் ஆட்சிக்கு வருவார்கள் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிந்த உண்மை
யாக இருந்தது. இப்போது நடக்கின்ற ராஜபக்ஷக்களின் ஆட்சிதான்,
கூட்டமைப்பு தனது ஆதரவை விலக்கியிருந்தால் அப்போது மலர்ந்திருக்கும்.

அரசியல் கைதிகள் கொஞ்சப் பேரையாவது விடுவித்து, வடக்கு மற்றும்
கிழக்கு மாகாணங்களுக்கு 30 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு அதிகமான
அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க, செய்விக்க கூட்டமைப்பால் முடிந்தி
ருந்தது. இதுகூட நல்லாட்சி அரசுக்கு கூட்டமைப்புப் பிரயோகித்த வலுக்
குறைந்த அழுத்தத்தின் ஊடாகவே நடந்தது.

ஒப்பந்தங்களைச் செய்தது. சிங்களத் தலைவர்கள் வழமைபோன்று ஒப்பந்தங்களைச் செய்வதும் பின்னர் அதைத் தூக்கிக் கடாசுவதும் இயல்புதான். இங்கேயும் அதுதான் நடைபெற்றது. ஒவ்வொரு தடவையும் கூட்டமைப்பு ஒப்பந்தம் செய்வதும், அதன் பின்னர் ஏமாற்றப்படுவதும் நல்லாட்சி அரசின் காலத்தில் கிரமமாக நடைபெற்றது.

ஒப்பந்தங்களை நல்லாட்சி அரசு கிழித்தெறியும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவை விலக்கிக் கொண்டிருக்க முடியுமே என்ற கேள்வி எழும். அது நியாயமானதுதான். நல்லாட்சி அரசுக்கான ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலக்கிக் கொண்டால் யார் ஆட்சிக்கு வருவார்கள்? தென்னிலங்கையில் காலம் காலமாக இரண்டு தேசியக் கட்சிகளும்தான் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்றன. நல்லாட்சி அரசில் இரண்டு கட்சிகளும் சேர்ந்திருந்தாலும், அடுத்த பலம் பொருந்திய தரப்பாக ராஜபக்ஷக்கள் இருந்தார்கள்.

நல்லாட்சி அரசுக்கான ஆதரவை கூட்டமைப்பு விலக்கினால் ராஜபக்ஷக்கள்தான் ஆட்சிக்கு வருவார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்த உண்மையாக இருந்தது. ராஜபக்ஷக்களின் ஆட்சி எப்படிப்பட்டது என்பதும், அவர்கள் காலத்துக்கு காலம் என்ன செய்தார்கள் என்பதையும் சாரம்சமாக இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்போது நடக்கின்ற ராஜபக்ஷக்களின் ஆட்சிதான், கூட்டமைப்பு தனது ஆதரவை விலக்கியிருந்தால் அப்போது மலர்ந்திருக்கும். இதுதான் தமிழ் மக்களுக்குத் தேவையா? எந்த ஆட்சி வேண்டாம் என்று எல்லோரும் ஒன்றுசேர்ந்து அகற்றினார்களோ அந்தத் தரப்பு இலகுவாக ஆட்சியில் வந்து அமர்வதற்கு கூட்டமைப்பே அடியெடுத்துக் கொடுக்க வேண்டுமா?

தென்னிலங்கையில் இரண்டு தரப்புக்கள் மாறி , மாறி ஆட்சிக்கு வரும் நிலை மாறி மூன்றாவது ஒரு தரப்பு தலையெடுத்தால் மாத்திரமே, கூட்டமைப்புக்கான பேரம் பேசல் வாய்ப்பு என்பது அதிகரிக்கும். அது இல்லாத வரை, ஒன்றில் இவர் அல்லது அவர் என்ற தெரிவு மாத்திரம்தான் கூட்டமைப்புக்கு. கெட்டவரில் ஓரளவு நல்லவரைத் தெரிவு செய்வதா அல்லது கெட்டவரில் கேடுகெட்ட கெட்டவரைத் தெரிவு செய்வதா என்பதுதான் கூட்டமைப்புக்கு முன்பாக இருந்த தெரிவுகள்.

இதன் காரணமாக கூட்டமைப்பால் நல்லாட்சி அரசுக்கு ஓரளவே அழுத்தங்களைப் பிரயோகிக்க முடிந்தது.

நல்லாட்சி அரசில் எந்த அமைச்சுப் பதவியும் பெறாமல், காணிகளை விடுவித்து, அரசியல் கைதிகள் கொஞ்சப் பேரையாவது விடுவித்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு 30 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு அதிகமான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க செய்விக்க கூட்டமைப்பால் முடிந்திருந்தது. இதுகூட நல்லாட்சி அரசுக்கு கூட்டமைப்புப் பிரயோகித்த வலுக் குறைந்த அழுத்தத்தின் ஊடாகவே நடந்தது.

இவ்வளவு விடயங்களையும் சாதித்துக் காட்டிய கூட்டமைப்பை குறைகூறுபவர்கள் ஒருவேளை, நல்லாட்சி அரசின் காலத்தில் பதவியிலிருந்திருந்தால், தமிழ் மக்களுக்கு இவ்வளவும் கிடைத்திருக்காது என்பது மட்டுமல்ல, அவசரக்குடுக்கைத்தனமான அரைவேக்காட்டு முடிவுகளால் ராஜபக்ஷக்களை எப்போதோ ஆட்சியில் அமர்த்தியிருப்பார்கள். நல்லவேளை தமிழ் மக்கள் 2015ஆம் ஆண்டு தமது சரியான தெரிவு ஊடாக கூட்டமைப்புக்கு வாக்களித்திருந்தனர்.

இப்போதும் அரைவேக்காட்டுத்தனமான முடிவுகளை எடுக்க விரும்புவர்களை, எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயற்பட விரும்புவர்களை தமிழ் மக்கள் தெரிவு செய்வது என்பது, தமிழர்களின் வீழ்ச்சிக்கு அல்லது அழிவுக்கு தமிழர்களே தூபம் போட்டவர்கள் என்பதாக அமையும். தமிழ் மக்கள் சரியான தரப்பை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவு செய்வது என்பது, ஆகக் குறைந்தது தமிழர்களின் இருப்பையாவது பாதுகாக்க உதவுவதாக இருக்கும்.

## விபத்தில் சிப்பாய் உயிரிழப்பு

காலி, ஜூன் 26

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாலத்துடன் மோதியதில், அதில் பயணித்த இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து காலி-மாத்தறை பிரதான வீதியில் உள்ள அஹங்கமகந்த பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவத்தில் 30 வயதுடைய இராணுவச் சிப்பாய் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ரி2)

# கொழும்பில் தொழிலுக்காக தங்கியிருப்போருக்கு வீடு

### வாடகை அடிப்படையில்

கொழும்பு, ஜூன் 26

நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து தொழிலுக்காக கொழும்பு நகரில் தங்கியிருப்போருக்கு வாடகை அடிப்படையின்கீழ் வீடு வழங்கும் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைச்சின் செயலாளர் பிரியத் பந்துவிக்ரம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"அரச மற்றும் தனியார் நிறுவனங்களை நடத்திச் செல்லும் பகுதிகளில் அதிகமாக வாடகை குடியிருப்புக்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கான வீட்டுத்திட்டத்தின்கீழ் அடுத்து 5 வருடங்களில் 40ஆயிரம் வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலில் ஈடு படுபவர்கள் அனைவரும் சம்பளத்துக்கு ஏற்ப புதிய வீடுகள் பெற்றுக் கொள்வதற்காக மத்திய மட்டத்திலான வீட்டுத் திட்டங்களை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. வீட்டுத்திட்டம் நிர்மாணிப்பதற்கான காணிகள் இலவசமாக வழங்கப்படும். தனி அறைகள், 2 அறைகள், 3 அறைகள் என்ற பிரிவில் 7.5 - 15 மில்லியன் ரூபா கட்டணத்தில் வீடுகள் நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார். (க)

# கருணா விவகாரம்: நழுவினார் பந்துல

கொழும்பு, ஜூன் 26



கருணா அம்மான் வெளியிட்டார் எனக் கூறப்படும் கருத்து தொடர்பில் அமைச்சரவையில் எதுவும் கலந்துரையாடப்படவில்லை. எனவே, அது தொடர்பில் பதிலளிக்க முடியாது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது கருணா அம்மான் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய அறிவிப்பு தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் கேள்வி எழுப்பினார்.

இதன்போது இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை. எனவே, அது பற்றி பதிலளிக்கமுடியாது எனக்கூறி நழுவினார் அமைச்சர்.

ஆனையிறவு சமர் மற்றும் கிளிநொச்சியில் வைத்து ஆயிரக்கணக்கான படையினரைக் கொன்றேன் என கருணா அம்மான் வெளியிட்ட கருத்தானது தெற்கு அரசியலில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. தேர்தல் பரப்புரை மேடைகளிலும் இதுவே பேசுபொருளாக உள்ளது.

அத்துடன், கருணாவின் அறிவிப்பு தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் எனவும் எதிரணியினர் வலியுறுத்தியுள்ளனர். சி.ஐ.டி. விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (க-44)

# கட்டுப்பாடுகள் தளர்வதால் அபாய கட்டத்தில் இலங்கை

### சுகாதாரப் பணிப்பாளர் அதிருப்தி



**கொழும்பு, ஜூன் 26**

**கொரோனா அச்சுறுத்தலை அடுத்து நாட்டில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர், பொதுப்போக்குவரத்துச் சேவை மற்றும் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற வரும் மக்களின் செயற்பாடு வருத்தமளிக்கிறது என்று சுகாதாரப் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பலர் சுகாதார வழிமுறைகளுக்கு அமையச் செயற்படுவதில்லை. தனிநபர் இடைவெளிகளைக் கடைப்பிடிக்காமல் ஒருவருக்கு ஒருவர் நெருக்கமாக செயற்படுகின்றனர். விசேடமாக பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பயணிக்கும் போது, ஓர் ஆசனத்தில் ஒரு பயணி பயணிப்பதுடன், முகக்கவசம் அணிவது மிகவும் முக்கியமாகும். இவ்வாறான இடங்களில் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாமல் இருப்பது ஆபத்தாக மாறும். அவ்வாறான பல இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எதிர்வரும் பொதுத்தேர்தல் காலப்பகுதியில் சுகாதாரச் சட்டங்களை முழுமையாகச் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (க)

# பாதாள உலகக் குழுவினரை கைதுசெய்ய 'இன்ரபோல்'

கொழும்பு, ஜூன் 26


நாட்டில் இடம்பெறும் பாதாள உலகக் குற்றங்களாகக் கருதப்படும் திட்டமிட்ட குற்றங்களை வெளிநாடுகளில் இருந்து நெறிப்படுத்துகின்றனர் என்று நம்பப்படும், பாதாள உலகக் குழுத்தலைவர்கள் 10 பேரைக் கைதுசெய்ய இன்ரபோலின் ஊடாக சிறப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் உள்ள சர்வதேச பொலிஸ் கிளை ஊடாக இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், அவர்களை கைது செய்து இலங்கையில் அவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பாகச் சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் திட்டமிட்ட குற்றங்களை தடுக்கும் பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

உள்நாட்டில் பிரதானமாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் செயற்படும் 17 பாதாள உலகக் குழுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும், அக்குழுக்களை முற்றாக ஒழிக்கும் சிறப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளைத் தளபதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர கூறினார்.

அதில் மேல் மாகாணத்தில் குறிப்பாக 11 பாதாள உலக கும்பல்கள் செயற்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டிய அவர், அக்குழுக்களை இலக்கு வைத்து மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட 7 வலயங்களில் அதிரடிப் படையின் மோட்டார் சைக்கிள் படைப் பிரிவு வீரர்கள், உடன் நடவடிக்கைப் பிரிவு வீரர்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் சுட்டிக் காட்டினார். (எ)

# மழை தொடரும்

கொழும்பு, ஜூன் 26



இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும், மழையுடனான வானிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், வடமேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சட்டத்தரணி ஹிஜாஸின் அடையாள அணிவகுப்பை ரத்துச் செய்வதாக அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதன் ஊடாக அவருக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படலாம் என்பதை அவதானித்த கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க, ஹிஜாஸை அடையாள அணிவகுப்புக்காக முன்னிலையாகுமாறு விடுத்த உத்தரவையே இரத்துச் செய்துள்ளார்.

அத்துடன் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தவேண்டும் என்ற முறைப்பாட்டாளர் தரப்பான சி.ஐ.டி. மற்றும் சட்ட மா அதிபர் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க நிராகரித்துள்ளார். சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை நேற்றுமுன்தினம் கோட்டை நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்காக முற்படுத்துமாறு, கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க கடந்த ஜூன் 18 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார். நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு வந்தது. இதன்போது, இதுவரை சந்தேகநபராகப் பெயரிடப்படாத, சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் சட்டத்தரணிகளான ஹபீல் பாரிஸ், ரணிலா சேனாதீர, சஞ்சீவ, ஹசான் நவரத்ன பண்டார ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார முன்னிலையாகியிருந்தனர். (ப)

# எம்.சி.சி. உடன்படிக்கை கைச்சாத்திடப்படமாட்டாது

## அரசு திட்டவட்டம்

**கொழும்பு, ஜூன் 26**

**எம்.சி.சி. உடன்படிக்கை கைச்சாத்திடப்படமாட்டாது என்று இலங்கை அரசு மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.**

இதன்போது எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் பிரகாரம், எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடமுடியாது என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

தற்போது இறுதி அறிக்கை வெளிவந்துள்ளது. எனவே, இது விடயத்தில் அரசின் முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண, "எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடமாட்டோம் என அமைச்சர் பந்துல குணவர்தன இரண்டு தடவைகள் அறிவித்து விட்டார். இதுவே அமைச்சரவையின் நிலைப்பாடும் கூட. அவரின் அறிவிப்பை மீண்டும் ஒருமுறை நான் உறுதிப்படுத்துகின்றேன். அதாவது, குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது." என்றார்.

அதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் பந்துல குணவர்தன,

"எம்.சி.சி. உடன்படிக்கையிலுள்ள சில சரத்துகள் அரசமைப்புக்கு முரணானவை என இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனையடுத்தே எப்படியான நன்மைகள் கிடைத்தாலும், உள்நாட்டு சட்டதிட்டங்களுக்கு முரணாக வெளிநாட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதில்லை என்ற முடிவை அரசு எடுத்தது. எம்.சி.சி. தொடர்பில் இறுதி அறிக்கை வெளிவந்துள்ளது. விடயங்கள் ஆராயப்படும். அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படை தன்மையுடன் இடம்பெறும். ஆனால், அரசமைப்புக்கு எதிரான உடன்படிக்கையில் கைச்சாத்திடமாட்டோம்"- என்றார்.(க-44)

# அரசமைப்பு பேரவையில் பல விடயங்கள் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 26

அரசமைப்புப் பேரவையின் 80 ஆவது கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட்டு, தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

அரசமைப்புப் பேரவையின் 80 ஆவது கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை அதன் தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது

இதில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினர்களாக இருந்த நிஹால் பொன்சேகா மற்றும் துஷ்னி வீரக்கோன் ஆகியோரின் பதவி விலகலைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த கலாநிதி ராணி ஜயமஹா மற்றும் சமந்த குமாரசிங்க ஆகியோரின் பெயர்கள் அரசமைப்புப் பேரவையால் கலந்துரையாடப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

அரசமைப்புப் பேரவையின் உறுப்பினராகவிருந்த கலாநிதி. ஜயந்த தனபாலவின் பதவி விலகல் தொடர்பில் தலைவரால் அரசமைப்புப் பேரவைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இந்த வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பில் அரசமைப்புப் பேரவையின் ஏற்பாடுகளுக்கு அமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பேரவையின் தலைவர் அதன் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தில் காணப்படும் வெற்றிடத்துக்கு பரிந்துரைக்கப்பட்ட பிரிகேடியர் பி.பி.ஜே.பெர்ணான்டோவின் (ஓய்வுபெற்ற) பெயர் குறித்தும் பேரவை கலந்துரையாடியது. தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலும் பேரவை கவனம் செலுத்தியது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூலினால் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துத் தொடர்பில் பேரவைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த கடிதம் மற்றும் அது பற்றி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட அவதானிப்பு அரசமைப்புப் பேரவையின் தலைவரால்,உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன், அஹிம்சா விக்ரமதுங்கவினால் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தின் பிரதி பேரவையின் தலைவரால் அதன் உறுப்பினர்களின்

கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதுடன், இது தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவின் அவதானிப்பு இதுவரை கிடைக்கப்பெறவில்லையென்றும், இதனை விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது- என்றுள்ளது. (ப)

## தேர்தலை முன்னிட்டு தெளிவூட்டும் பத்திரங்கள்

கொழும்பு, ஜூன் 26

பொதுத்தேர்தலை முன்னிட்டு மக்களைத் தெளிவூட்டும் வகையில் வீடுகளுக்கு வழங்குவதற்கான பத்திரங்கள் அச்சிடப்பட்டுள்ளன என்று அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை 20 மாவட்டங்களுக்கான பத்திரங்கள் அச்சிடப்பட்டுள்ளன என்று அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கான பத்திரங்களை அச்சிடும் பணிகளும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

இந்தப் பத்திரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும். சுமார் 80 இலட்சம் பத்திரங்கள் அச்சிடப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (க)

## சட்ட நடைமுறைப்படுத்தலில் பொலிஸார் கடும் அத்துமீறல்

*சட்டத்தரணி மீகாரா டொஸ் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 26

இந்த நாட்டில் காணப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, சாதாரண பொதுமக்கள் மீது அத்துமீறியும், அரசியல் ஆதிக்கம் கொண்டவர்கள் மீது கண்டுகொள்ளாமலும் இலங்கை பொலிஸார் செயற்படுகின்றர் என இளம் சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினரான சட்டத்தரணி மீகாரா டொஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020 ஜுன் மாதம் 9 ஆம் திகதியன்று காலி வீதியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நடத்தப்பட்ட அமைதிவழிப் போராட்டத்தை பொலிஸார் கலவரமாக மாற்றினர். ஆர்ப்பாட்டமொன்றை நிறுத்துவதானால், பொலிஸார் நீதிமன்ற ஆணையொன்றைப் பெற்றிருக்கவேண்டும். அதை ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்களிடம் காண்பித்தால், ஏற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடவேண்டும். அதன் பின்னரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிடாத பட்சத்தில், அவர்களுக்கு வாய்மொழியில் பேசியிருக்க வேண்டும். அதை விடுத்து அவர்களை சட்டத்துக்கு முரணான வகையில் அடித்திழுத்து, கண்டபடி பொலிஸ் ஜீப்புக்குள் போடுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. எதற்காக இந்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்கிறீர்கள் என்று பொலிஸாரிடம் வினவிய எமது இளம் வழக்கறிஞரான சுவஸ்திக்கா ஆறுலிங்கத்தைப் பொலிஸார் பெண் என்று கூடப் பார்க்காமல் ஜீப்புக்குள் தூக்கிப் போட்டனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்த நாட்டில் உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. நாட்டில் சட்ட ஒழுங்குகளைப் பாதுகாத்து நடக்கவேண்டிய பொலிஸார் அந்தச் சட்ட ஒழுங்குகளை மீறியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டமானது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடத்தப்பட்டது. அதுவும் இந்நாட்டிலுள்ள அடிப்படை உரிமைகளில் ஒன்றான கருத்துக் கூறும் உரிமையின் அடிப்படையில் நடத்தப்பட்ட அமைதியான போராட்டமாகும்.

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் பொலிஸார் நீதிமன்ற ஆணையைப் பெற்று நிறுத்தியிருக்க வேண்டும். அதைவிடுத்து அராஜகமாக மக்களை அடித்து இழுத்து கைது செய்வது சட்டத்துக்கு முரணானது - என்றார். ( )

## பொலிஸ் தடுப்பிலிருந்த சந்தேகநபர் தற்கொலை

கொழும்பு, ஜூன் 26

நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் நிலையத்தில் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரான சுங்க ஊழியர் ஒருவரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டநபர் 32 வயதுடையவரெனவும், கடனட்டை மோசடியில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டிருந்தவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர். (க)



## மர்மமான முறையில் உயிரிழந்த நாய்கள்!

கொழும்பு, ஜூன் 26

மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் 10 நாய்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கலேவெவ அலுத்வேவா பகுதியில் இருந்தே குறித்த நாய்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பிலான முறைப்பாடு கலேவெவ காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. பிரதேசத்தில் உள்ள பண்ணையொன்றை நடத்திச் செல்லும் சிலரினால் விஷம் செலுத்தி குறித்த நாய்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நாய்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதோடு சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கலேவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தேர்தல் பரப்புரைகளில் அர்த்தமற்ற கருத்தாடல்

## கரு ஜயசூரிய சுட்டிக்காட்டுகிறார்

**கொழும்பு. ஜூன் 26**

**பொதுத்தேர்தல் பிரசாரங்கள் வழமைபோன்று சேறுபூசுபவையாகவும், அர்த்தமற்ற கருத்தாடல்களாலுமே நிறைந்திருக்கின்றன. இவை புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதில் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை வலுவிழக்கச்செய்யும். எனினும் அவர்கள் நினைத்தால் இந்த வழக்கமான சுற்றுவட்டத்தைத் தகர்த்தெறிய முடியும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தற்போது வெளிவரும் செய்திகள் அனைத்துமே வழமை போன்று சேறுபூசுபவையாகவும், பயனற்ற கருத்துக்களாலும், அர்த்தமற்ற கருத்தாடல்களாலுமே நிறைந்திருக்கின்றன. இந்த நிலை தொடருமாக இருந்தால் ஒழுக்கமானதும், நேர்மையானதுமான ஓர் அரசியல் கலாசாரம் தொடர்பான மக்களின் எதிர்பார்ப்பு



மீண்டும் தோற்றுப்போய்விடும்.

இத்தகையதொரு வழமையான சுற்றுவட்டத்தை வாக்காளர்களால் மாத்திரமே தகர்த்தெறிய முடியும். அவர்கள் முழுவதுமாக இறையாண்மை உடையவர்களாவர். அதுமாத்திரமன்றி அரச சேவையாளர்கள் அவர்களது கடமையைச் செய்வதற்காக அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எப்பாடுபட்டேனும் அரச சேவையாளர்களின் சுயகௌரவமும், சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும் - என்றார். (ப)



# சோதனைச்சாவடியை பந்தாடியது பவுசர்

கொழும்பு,ஜூன் 26

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான பாலத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடியை பந்தாடியது மன்னார் நகர சபைக்குச் சொந்தமான கழிவு அகற்றும் பவுசர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை மதியம் நடந்துள்ளது.

மன்னார் நகர சபைக்குச் சொந்தமான கழிவு அகற்றும் பவுசர் மன்னார் நகரில் கழிவுகளைச் சேகரித்து பாப்பாமோட்டை பகுதியில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மீள் சுழற்சி நிலையத்துக்குக் கொண்டு செல்லும்போது விபத்து நடந்துள்ளது.

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் உள்ள பிரதான இராணுவச் சோதனைச் சாவடியை, கட்டுப்பாட்டை இழந்த பவுசர் மோதித் தள்ளியது.

வாகனத்தில் ஏற்பட்ட பழுது காரணமாகவே விபத்து நடந்துள்ளது.

சோதனைச் சாவடியில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் தூக்கி வீசப்பட்டன.சோதனைச் சாவடியில் வாகனங்கள் பதிவு செய்யப்படும் பகுதி முழுவதும் சேதம் அடைந்தது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-56)

# பரீட்சைத் திகதி, முறைமைகள் பற்றி விரைவில் அறிவிப்பு

*கல்வி அமைச்சு தெரிவிப்பு*

க.பொ.த உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான திகதி மற்றும் பரீட்சைகளை நடத்துவதற்கான முறைகள் குறித்து விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உரிய துறைகளுடன் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி திகதியை தீர்மானிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் அறிவித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த)

# மங்களவை கவர்ந்ததாம் ஹரீனுடைய தைரியம்!

கொழும்பு, ஜூன் 26

தற்போதைய பெரும்பான்மை பாசிசவாத ஆட்சியை ஆதரிக்கின்ற தீவிரவாதப்போக்குடைய பௌத்த மதகுருமாருடன் கூட்டணியைப் பேணுவதாகக் கருதத்தக்க கத்தோலிக்கத் திருச்சபைப் பிரிவுகளின் பாசாங்குத்தனத்தை சவாலுக்கு உட்படுத்தும் ஹரீன் பெர்னாண்டோவின் தைரியம் என்னைக் கவர்ந்துள்ளது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்துக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினால் வெளியிடப்பட்டிருந்த கண்டன அறிக்கையில், ' மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்திற்குக் கடும் கண்டனம் தெரிவிக்கும் அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் தொடர்ந்து அரசுக்கு கர்தினால் வழங்கிய ஒத்துழைப்பு எப்போதும் மறக்கப்பட முடியாதது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பெரும்பான்மை பாசிஸவாத ஆட்சியை ஆதரிக்கின்ற தீவிரவாதச் சிந்தனையுடைய பௌத்த மதகுருமாருடன் முறையற்றதொரு கூட்டணியை உருவாக்கியிருப்பதாகத் தோன்றும் கத்தோலிக்கத் திருச்சபையின் பிரிவுகளின் பாசாங்குத்தனத்தை சவாலுக்குட்படுத்துவதில் ஹரீன் பெர்னாண்டோவின் தைரியம் என்னைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது என்று அவர் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ப)

# கருணா விடயத்தில் சட்டம் தன் கடமையைச் செய்யும்

## காதர் மஸ்தான் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 26

இந்த நாட்டிலே சட்டம் என்று ஒன்று உள்ளது. அதைக் கருத்தில்கொண்டு யோசித்து கருணா அம்மான் கருத்துக்களைத் தெரிவித்திருக்கலாம். இந்த நாட்டிலே இதுவரை காலப்பகுதியில் சட்டம் சரியாக செயற்பட்டு வந்திருக்கிறது. கருணா அம்மான் விடயத்திலும் சட்டம் தன் கடமையைச் செய்யும் இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா செட்டிக்குளத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சில நாட்டிலே சில ஒப்பந்தங்கள் தேவைப்பாடான ஒன்றாக இருக்கின்றது. அதில் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய விடயங்கள் இருப்பின் அதை நீக்கி அரசியல் மேல் மட்டங்களோடு கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதோடு தற்போதைய அரசாங்கம் இந்த உடன்படிக்கையை நிராகரித்து வருவதோடு சில சமயங்களில் அவற்றில் நல்ல விடயங்கள் காணப்படும் இடத்து ஆதரிக்கக் கூடும். ஆனாலும் நாட்டிற்கு பாதகம் ஏற்படும் விடத்து அதனை நாம் நிராகரிப்போம்- என்றார். (எ-110)

# முறைப்பாட்டால் அகற்றப்பட்டது மன்னார் நகரில் சுவரொட்டி

தலைமன்னார், ஜூன் 26

மன்னார் நகரப் பகுதியான பனங்கட்டுகொட்டு கிழக்குப் பகுதியில் கிராம அலுவலகத்துக்கு அருகாமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் அடங்கிய சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளதாக மன்னார் தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை மன்னார் தேர்தல் திணைக்களம் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு சென்றதைத் தொடர்ந்து சுவரொட்டிகள் அகற்றப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-60)

# ஊரடங்கை நீக்குவதா தொடர்வதா? முடிவு சுகாதார அமைச்சிடம்

கொழும்பு,ஜூன் 26

நாட்டில் ஊரடங்கைத் தொடர்ந்து நீடிப்பதா அல்லது நீக்குவதா என்பது தொடர்பாக சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாகத் தீர்மானிக்கப்படும் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸின் தாக்கம் இலங்கையிலும் அதிகரித்ததைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம் முதல் கட்டம் கட்டமாக மற்றும் தளர்வுகளுடனான ஊரடங்கு நடைமுறையில் இருந்தது.

கடந்த மே மாதம் வரையில் நாட்டில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது இரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணிவரையில் மாத்திரம் ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், நாட்டில்கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 2001 ஆக அதிகரித்துள்ள போதிலும், இந்தத் தொற்று மக்கள் மத்தியில் பரவுகின்றமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு நீக்குமா அல்லது தளர்த்தப்படுமா என்பது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் மொஹான் கருணாரத்ன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (க)

# முகாமைத்துவம் சரியில்லையேல் கொரோனா மீளவும் பரவியே தீரும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 26

**வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யாவிட்டால், நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று அபாயம் ஏற்படக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**



நாட்டில் தற்போது வைரஸ் தொற்று பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அந்த சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

எனவே, வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள், தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர், மீண்டும் நாட்டில் பயணிக்கும் பகுதிகளில் ஏதாவது சந்தேகத்துக்கிடமான நிலைமை ஏற்படுமாயின் உடனடியாக அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

இதனூடாக குறித்த பகுதிகளில் பரவலைத் தடுப்பதற்கு சுகாதாரத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

# உப்பு நிறுவனம் இலாபமீட்ட ஒரு வருட கால அவகாசம்

## ஜனாதிபதி வழங்கினார்

கொழும்பு, ஜூன் 26

2018ஆம் ஆண்டு தொடக்கம் நட்டத்தில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு நிறுவனம் இலாபமீட்டுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு வருடகால அவகாசம் வழங்கியுள்ளார்.

வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டின் இலாபம் 70 கோடி. 2017ஆம் ஆண்டாகும்போது இலாபம் 32 கோடிகளாக குறைவடைந்துள்ளது. 2018ஆம் ஆண்டு 28 இலட்சங்களாகவும் 2019ஆம் ஆண்டு ஒரு கோடியே தொண்ணூற்றியொரு இலட்சமாகவும் இந்த நிறுவனம் நட்டமடைந்துள்ளது.

மூன்று வருட காலத்துக்குள் ஏற்பட்ட நட்டத்தை கண்டறிந்து இலாபமீட்டுவது தற்போதைய தலைவர் உட்பட பணிப்பாளர் சபையின் பொறுப்பு என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு நிறுவனத்தின் தற்போதைய நிலைமையை பரிசீலிப்பதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதைக் குறிப்பிட்டார்.

1998ஆம் ஆண்டு தனியார்மயப்படுத்தத் திட்டமிட்டிருந்த உப்பு கூட்டுத்தாபனத்தை மஹிந்த ராஜபக்ஷ தொழிலாளர் அமைச்சராக தலையிட்டு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் (ஈ.ரி.எவ்) கீழ் கொண்டு வந்தார். பின்னர் நிறுவனத்தின் மூலதனத்தில் 90% வீதம் நிறுவனமும் 10% வீதத்தை ஊழியர்களும் பெற்றுக்கொண்ட வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு நிறுவனம் பெருமளவில் இலாபமீட்டும் நிறுவனமாக மாறியது. (ஈ.ரி.எவ்.) நிதியத்தின்கீழ் இயங்கிவரும் நிறுவனம் ஒன்று நட்டமடைவது எந்தவிதத்திலும் இடம்பெறக்கூடாதென்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் 06 மாதங்கள் மற்றும் ஒரு வருடத்துக்கான திட்டங்களை வெவ்வேறாக தயார்செய்து இலாபமீட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

உப்பு இறக்குமதியை எதிர்காலத்தில் முழுமையாக நிறுத்த வேண்டும். 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததுபோல் தமது உற்பத்தியை ஏற்றுமதி செய்யும் நிறுவனமாக வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு நிறுவனத்தை மாற்ற வேண்டுமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் என்றும் அவருடைய ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)

# இலங்கை கடற்படையினரே அழைத்து வரப்படுகின்றனர்!

கொழும்பு, ஜூன் 26

வெளிநாட்டு கடற்படையினரை உள்நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி, வெளிநாடுகளிலுள்ள இலங்கை கடற்படையினரை அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது என்று ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து வரும் கடற்படையினரில் அதிகமானவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமையே இதற்கு காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# அம்புலன்ஸ் – மோ.சைக்கிள் விபத்தில் சிக்கி ஒருவர் சாவு

திருகோணமலை, ஜூன் 26

திருகோணமலை, மூதூர் மல்லிகைத்தீவு சந்தியை அண்மித்து அம்புலன்ஸ் - மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் மூதூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அல்லை நகர் .6 ஆம் வட்டாரம், தோப்பூரைச் சேர்ந்த ஜவாகிர் முகமது அஹ்சன் (வயது-23) என்பவரே உயிரிழந்தார். வாகன சாரதி கைதானார். மூதூர் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த)

# 5 ஆண்டுகளில் கிளிநொச்சி மோசமாக சீரழிந்துள்ளதாம்

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி மாவட்டம் என்றுமில்லாதவாறு கடந்த ஐந்து வருடங்களுக்குள் சீரழிக்கப்பட்டுள்ளது. கல்வி, பொருளாதாரம், உட்கட்டமைப்பு, சுற்றுச் சூழல், இளம் சமூகத்தின் வாழ்க்கை, என அனைத்துத் துறைகளிலும் மாவட்டம் மிக மோசமாகச் சீரழிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் இந்த மாவட்டத்தில் அதிகாரத்தில் இருந்த அரசியல் தரப்பும், அதிகாரத் தரப்புமே இதற்குக் காரணம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 2015 தொடக்கம் 2020 வரை இந்த மாவட்டத்தில் அதிகாரத்தில் இருந்த அரசியல் மற்றும் அதிகாரத் தரப்பினர் மாவட்டத்தைக் குட்டிச் சுவராக்கிவிட்டனர். மிக மோசமான சீரழிவுக்குக் கொண்டு சென்றுள்ளனர். எங்கும் ஊழல், இலஞ்சம் நிறைந்து காணப்படுகிறது. பிரதேச சபைகள் ஊழல் முறைகேடுகள் நிறைந்த சபை யாக விளங்குகின்றன. இதனை நான் வெறும் வார்த்தைகளில் விமர்சிக்கவில்லை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெறப்பட்ட ஆதா ரங்களைக் கொண்டே கூறுகிறேன். பல ஊழல்கள் முறைகேடுகள் கணக்காய்வு அலுவலகத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கைவளம் கிளிநொச்சி ஒரு கட்சியின் அமைப்பாளர்கள், கிராம மட்டச் செயற்பாட்டாளர்களால் மிக மோசமாகச் சுரண்டப்பட்டு வருகிறது. அதிகாரத்தில் இருந்த வர்கள் இதனைக் கண்டுகொள்ளவில்லை மாறாக அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து சமூகவிரோதிகளைப் பாதுகாத்துவருகின்றனர். இப்படி பல துறைகளில் மாவட்டத்தைச் சீரழித்தவர்கள் மீண்டும் மக்கள் முன் வெட்கமின்றி உணர்ச்சிப் பேச்சுக்களைப் பேசி வாக்குக் கேட்டு வருகின்றனர். தூரநோக்கு அல்ல கிட்ட நோக்கு கூட இல்லாதவர்கள் கடந்த ஐந்து வருடங்களில் மாவட்டத்தைச் சீரழித்துவிட்டனர். கிளிநொச்சி மாவட்ட மக்கள் இவர்களுக்கு இந்தத் தேர்தலில் தக்க பாடம் புகட்டவேண்டும். பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து மாவட்டத்தை சீரமைக்க வழி வகுக்க வேண்டும்- என்றார். (ப -214)

# கருணா அம்மானின் உரையை நியாயப்படுத்தவே வேண்டாம்

## அரசை வலியுறுத்துகிறார் விமல்

கொழும்பு, ஜூன் 26

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில், தான் இருந்தபோது ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைப் படுகொலை செய்தார் என்று கருணா அம்மான் ஆற்றிய உரையை சிங்கள மக்கள் எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இந்தநிலையில், அவரின் உரையை நியாயப்படுத்தும் வகையில் அரச தரப்பினர் கருத்துக்கள் வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

'இறுதிப் போரில் அரசின் சாட்சியாளரான கருணா அம்மானுக்குச் சட்டத்தின் முன்னிலையிலும் மன்னிப்புக் கிடைக்கும். அரசும் அவருக்கு மன்னிப்பு வழங்கும்' என்று மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்திருந்தார். இது தொடர்பில் விமல் வீரவன்சவிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்க கருணா அம்மான் உதவினார். அதற்காக அவர் ஆற்றிய உரையை அரசு எந்த வழியிலும் நியாயப்படுத்த முடியாது. அவ்வாறு நியாயப்படுத்தினால் அவர் பயங்கரவாத அமைப்பிலிருந்து செய்த வீரச் செயல்களை நாம் போற்றுவதாக அமையும். அத்துடன் போர்க்களத்தில் உயிர்த் தியாகம் செய்த எமது இராணுவத்தினருக்கு நாம் துரோகம் செய்வதாகவும் அமையும்.

இதேவேளை, கருணா அம்மானின் உரையை முன்வைத்து எதிரணியினர் தேர்தல் பரப்புரை மேற்கொள்வதை உடன் நிறுத்த வேண்டும் - என்றார். (கு-22)

# சித்தந்தெளி மனமே!

ஐயர்



நல்ல மழை. வளவு மூலைகளில் பார்த்தால் ஆங்காங்கே காளான்கள் கூட்டம் கூட்டமாக முளைத்திருந்தன. மழை விட்டு ஓரிரு நாட்களில் அவை காணாமல் போய்விட்டன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் மழை தூறத்தொடங்கி யதும் எங்கிருந்தோ யாருமறியாக் கட்சிகள், குழுக்கள் , தெரியாத பெயர்கள், தெரியாக முகங்கள் கச்சை கட்டிக்கொண்டு கிளப்பிவிடப்பட்டுள்ளன. ஜனநாயக சோசலிசக் குடியரசில் தேர்தலில் நிற்கும் சுதந்திரம் யாருக்கும் உண்டு. அது மனித உரிமை. ஆனால் நாம் எங்கே நிற்கிறோம் எமது தேவை என்ன, நான் எங்கே நிற்கிறேன் என்னால் ஆவதென்ன என்று சிந்திப்பதே இன்றைய வாக்காளரதும் வேட்பாளரதும் தேவை. எல்லோரும் ஒன்றாக ஒரு கட்சியினரை கூட்டமைப்பு என ஒரு சிலரை தெரிவுசெய்தோம் என்ன செய்தார்கள்? செய்ததை, செய்வதைப் பார்த்துக்கொண்டுதானேயிருக்கிறோம் . எல்லோருமே கண்ணனில்லை, இராமனில்லை, கடவுளில்லைதான். ஆனால் தமிழ் மக்கள் ஒன்றாக நிற்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தேவை இருக்கிறது என்பதை ஒற்றுமை சுட்டிநிற்கிறது என்பதை உறுதியாக நம்புவோம். தவிர அவர் செய்யவில்லை, இவர் செய்யவில்லை, அப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யலாம், நானென்றால் இப்படிச்செய்வேன் என்பதெல்லாம் மேடைப் பேச்சுக்கு அணிசேர்க்கலாமே தவிர நடைமுறையில் பிரயோசனமில்லை. அவரை, இவரை குறை சொல்லி ஆவதொன்றுமில்லை. பிரிந்து நின்றும் ஆவது ஒன்றமில்லை என்பதனால் தமிழர்கள் ஒற்றுமையாக ஒரே அணியில் உள்ளனர் என்பதை நிரூபிக்கவே தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது.

அதன்பின் இயக்கங்கள்??? பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள். பின்னர் கூட்டமைப்பு .இதனை விரிவாக எடுத்தியம்பத் தேவையில்லை. இந்த நிலையில் எதையும் சாதிக்காவிட்டாலும் எமது பெரும் ஒற்றுமை எம்மத்தியிலும் அரசின் மத்தியிலும் வெளியுலகிலும் கணிக்கப்பட்டது. மதிக்கப்பட்டது. எனினும் ஆய்வாளர்கள், மதிப்பீட்டாளர்கள் மத்தியில் எமது ஒற்றுமைக்கு எதிராக வீழ்ந்த சிறிதளவு வாக்குகள்கூட நூற்று வீதத்தால் கணிக்கப்பட்டு வண்ண, வண்ண வட்டங்களால் காட்டப்பட்டு குறை கூறப்பட்டு கட்டுரைகள் பத்தி பத்தியாக பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்தோம். நாடாளுமன்றத்தில்பேசியதையும் பார்த்தோம். எம்மவர்களை சந்திக்க வந்த சர்வதேச உறுப்பினர் குத்திக்காட்டியதைப் பார்த்தோம். இது எதனால் வந்தது ? தம் பலம் அறியாத சில சிற்றெறும்புகள் பக்குவமாக குவிக்கப்பட்டிருந்த கூட்டமைப்பு எனும் அரிசிக் குவியலிலிருந்து தம் சுய தேவைக்காக எடுத்துச் சென்ற சில அரிசிகளாலேயே வந்தது.

இதற்கு நல்ல உதாரணம் கிழக்கு மாகாணசபைத் தேர்தல். தமிழ்க் கூட்டமைப்புக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் வாக்கு வித்தியாசம் வெறும் 5000க்கும் குறைவானவையே. அங்கே தமிழ்ச் சிற்றெறும்புகள் படையெடுக்காதிருந்தால் கூட்டமைப்புக்கு அந்த வாக்குகளும் கிடைத்திருக்கலாம். அதனால் கூட்டமைப்பு ஆட்சியமைக்க வாய்ப்பும் கிட்டியிருக்கும். அவ்வாறே யாழ். மாவட்டத்தில் கடந்தகால தேர்தல்களில் நூற்றுக்கும் குறைவான வாக்குகளே மாற்றுக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக வாய்ப்பளித்தது. ஜே.வி.பி.க்கு யாழ். மாவட்டத்தில் கிடைத்த முன்னூறுக்கும் குறைவான வாக்குகள் போன்று ஆங்காங்கே கிடைத்த சிறுதொகை வாக்குகள் தேசியமட்டத்தில் மேலதிக உறுப்பினரைப் பெற அந்தக்கட்சிக்கு உதவியது. உண்மையில் கூட்டமைப்பு வடக்கு,கிழக்குக்கு வெளியிலும் போட்டியிடுவதன் மூலம் தேசியப்பட்டியலுக்கான வாக்கு வங்கியை உருவாக்கலாம். உண்மையில் வடக்கு, கிழக்கு பற்றுள்ளவர்கள் தமது வதிவிட மற்றும் இன்னோரன்ன தேவைக்காக தங்கள் வாக்காளர் பதிவை வடக்குக்கு வெளியே பேணுகின்றனர். அவர்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கலாம் . அது மேல் மாகாணத்தில் ஒரு ஆசனத்தைப் பெற்றுத் தரக்கூடும். அல்லது தேசியப்பட்டியலுக்கு உதவக்கூடிய நல்லதொரு பெருந்தொகையாகும். எனினும் மனோ கணேசன் பற்றியும் கூட்டமைப்பினர் சிந்தித்தது பொருத்தமானதே.

மனோ கணேசன் வீரகேசரி வார இதழொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் "மலையகத்தில் சேவலுடன் கூட்டுச் சேர்ந்து சில ஆசனங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் கொழும்பில் பிரிந்து போட்டியிட்டு எமக்கு 51,000 வாக்குகளும் சேவலுக்கு வெறும் 3000 வாக்குகளும் கிடைத்தன. சேர்ந்து கேட்டிருந்தால் இன்னும் கூடக் கிடைத்திருக்கும் .ஆசனங்களும் அதிகமாயிருக்கும்"எனக் குறிப்பிட்டிருந்தார்.

இன்றைய காலகட்டத்தில் தென்னிலங்கை அரசுடன் எதையும் பெரிதாக சாதித்துவிட முடியாது . ஆனால் ஒற்றுமை

> தேசியத்தில் தமிழினம் ஒன்றாக நிற்கின்றது எனும் ஒரே வெளிப்படுத்தல் எவர் வெற்றி பெற்றாலும் சாதிக்க முடியாததை தெய்வ அருளாகக் கொண்டு வரலாம். இந்த உண்மையை ஒவ்வொரு வாக்காளரும் ஒரு தடவைக்கு இரு தடவை சிந்தித்து தமது வீட்டிலிருந்து குல்தெய்வத்தின் முன்வைத்து தீர்மானிப்பின் தமிழினம் தலை நிமிரும்.

யாகபலத்தைக் காட்டுவதன் மூலம் சிறிது ஆட்டங்காண வைக்க முடியும். நாங்கள் ஓரணியில் நிற்கிறோம் என்பதை மட்டுமே இப்போது சொல்லமுடியும், காட்ட முடியும் . அதன் மூலம் அற்ப பலன்களைப் பெறமுடியும். ஆனால் நீண்ட நாள் திட்டத்தில் இதுவே பெரும் நலன்களை கொண்டுவரும். சமூக நலன் பாராமல் தாமும் ஒருவாறு பதவி பெற்றால் என்ன எனக் குறுகிய நோக்கில் சிந்திப்பதைத் தவிர்ப்போம். ஊடக மாநாடுகள் நடத்த ஓரிருவர் போதும் ,சுவரொட்டிக்கும் விளம்பரத்துக்கும் சம்பளத்துக்கு ஆள்கிடைப்பர், உதவிப் பொருள் கொடுத்தால் வாங்க நாலுபேர் வருவர். ஆனால் வாக்குப் போடுபவர்கள் யார்? கடந்த தேர்தல்களில் அபேட்சகர் தொகைக்கும் குறைந்த வாக்குகளைப் பெற்ற கட்சிகளைக் கண்டுள்ளோம், சுயேச்சைக் குழுக்களையும் கண்டுள்ளோம்.

மனச்சாட்சியைத் தொட்டுக்கேட்டால் பொது நோக்கோடு களமிறங்கும், அதிக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் கட்சியைத் தவிர ஏனையவை ஒன்றோ இரண்டோ ஆசனங்கள்தான் பெறப்போகின்றன என்பது வெளிப்படை. அதனால் இனத்துக்கு என்ன பயன் ? பிரிந்து நிற்கிறோம், சோரம் போகிறோம் என வெளிச்சம் போட்டுக் காட்டவா? தேசிய மட்டத்தில் தமிழருக்கு கிடைக்ககூடிய போனஸ் ஆசனத்தை இல்லாமல் செய்யவா? ஒருமாதிரி தான்மட்டும்மூக்கை நுழைக்க ஆசைப்படும்சிறுகட்சித்தலைவர்கள் அதற்காக விசிறும் பணத்தைப்பொறுக்க ஒரு கூட்டம் அவர்களுக்கு சாமரம் வீசும் தொண்டர்கள். இதுதானே நடக்கிறது. இதுதானே உண்மை.

இங்கே ஒரு உதாரணத்தையும் சொல்லியே ஆகவேண்டும் கலையாடுபவர்கள் பற்றி அறிந்திருப்பீர்கள். அவர்கள் லேசாகத் தோளை அசைக்க தொடங்க பக்கத்தில் நிற்பவர் அரோகரா என்று கொஞ்சம் சாம்பிராணி புகையையும் இறுக்கிப்போட, மேளகாரரும் இறுக்கி வாசிக்க, பிறகென்ன உண்மையாகவே கலையாடுபவரோடு சும்மா நிற்பவனும் சேர்ந்தாடத் தொடங்குவான். இதுதான் அரசியலிலும் ஏத்திவிட்டு கூத்துப்பார்ப்பர் பலர். வாக்கு எண்ணும்போது கூடத்திரிந்தவன்கூட வாக்குப் போட்டிருக்கமாட்டான் . ஒரு வாக்குகூட கிடைக்காத சந்தர்ப்பங்களும் வருவதுண்டு( கேட்பவருக்கு கேட்கும் இடத்தில் வாக்குரிமை இருக்காது ஒருவரும் வாக்களித்துமிருக்கமாட்டார்கள்.) இதனைத் தேர்தல் முடிவுகளை ஆர அமர இருந்து பார்த்தால் தெரியும்.

தொகுதி வாரியான தேர்தல் என்றால் அந்த அந்த தொகுதிக்கு தகுதியானவர், செல்வாக்கானவர் தெரிவுசெய்யப்பட இடமுண்டு.ஆனால் இது விகிதாசார தேர்தல்முறை இங்கே வாக்குகள் ஒன்று சேர்க்கப்படவேண்டும். ஓரிடத்தில் குவிக்கப்படவேண்டுமே தவிர பகிரப்படுவதால் பிரிக்கப்படுவதால் பாதிப்புகள் பொதுமக்களுக்குத்தான், தமிழர் தரப்புக்குத்தான் என்பதை வாக்காளர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வேட்பாளர்கள் கொஞ்சம் ஆர அமர இருந்து யோசித்துப்பரருங்கள். கடந்த கால தேர்தல்களில் மக்களிடம் செல்வாக்கில்லாதவர்கள் மக்களுக்கு தெரியாதவர்கள், சிறிய கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் பெற்ற வாக்குகளால் என்ன நன்மை. அவையும் ஒருவிதத்தில் பார்த்தால் செல்லாத வாக்குகளே. இந்த வாக்குகள் பெரும்பான்மை வெற்றியீட்டிய கட்சிகளுக்கு கிடைத்தி ருந்தால் தேசீய ரீதியில் மேலுமொரு ஆசனம் கிடைத்திருக்கலாம் அல்லவா. வாக்குகள் எப்படி எண்ணப்படுகின்றன, வேட்பாளர் எப்படித் தெரிவு செய்யப்படுகிறார், மாவட்டத்தின் மொத்த வாக்காளர் எத்தனை, இதில் எனக்கு கிடைக்ககூடியது எவ்வளவு, என நெஞ்சைத்தொட்டு சுயமதிப்பீடு செய்தால் இதெனக்கு வேண்டாம் எனும் ஞானம் தோன்றும். இன்று சமூக சேவையில் உள்ளோர்பலர் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்,இறங்கியுள்ளனர். சமூகசேவையால் கிடைத்த கௌரவம் , சந்தோசம் இனிமேல்கெடப்போகிறது. தேர்தல் முடிவின்பின் தோல்வியால் மனச்சலிப்பு உண்டாவதுடன் சமூகசேவை ஆர்வமும் இல்லாது போகும். மக்களுக்கு நல்ல உள்ளம்கொண்ட சமூக சேவையாளர்களும்இல்லாமல்போவர்.

ஒரு உண்மையைப் பகிரவிரும்புகிறேன் ஒரு கிராமத்தில் பல இளைஞர் ஒன்றுகூடி ஒற்றுமையாக சமூக சமய சேவை செய்துவந்தனர். அந்தக்கிராமத்தில் ஒரு வீட்டு நன்மை,தீமையா, ஆலயத் திருவிழாவா? பாடசாலை நிகழ்வா ? எங்கும் முன்நிற்பர். பிரதேச சபைத் தேர்தல் வந்தது. அதில் மூவர் மூன்று கட்சியில் கேட்டனர். கூட்டு உடைந்தது.


இன்று ஒற்றுமையும் இல்லை ,சமூக சேவையுமில்லை. பாதிப்பு அந்தப்பகுதி மக்களுக்குத்தான்.

சரியோ , பிழையோ எல்லோரும் ஒன்றாக நிற்க வேண்டும் எனச் சிந்திக்கும் தமிழினம் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நல்ல எதிர் பார்ப்புடன் அரசியலில் அறியப்படாத மக்களுக்க அறிமுகமில்லாத விக்கினேஸ்வர னுக்கும் அனந்திக்கும் சம்பந்தர் தலைமையில் கூட்டமைப்புக் கேட்டதற்காக வாக்குகளை அள்ளிப்போடவில்லையா? அரசியலும் நிர்வாகமும் ஆளுமையும் அணைத்துப்போகும் தன்மையும் தெரியாத நீதியரசர் அதைப்போட்டுடைத்தார். இருந்தபோதும் தென்னிலங்கைக்கும் அரசுக்கும் நாங்கள் ஒன்றாக நிற்பது வெளிப்படுத்தப்பட்டது. சர்வதேச அரங்கில் எமது பலம், ஒற்றுமை வெளிப்படுத்தப்பட்டது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் முஸ்லிம் மக்களின் ஒரேகுரலால் எதுவும் நடக்கவில்லைதான்.

சிந்தித்துப்பார்த்தால் "பெரும்பான்மை , பெரும்பான்மை" என அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொள்வதன் காரணம் அவர்கள் உள்ளத்திலே அது உறுத்துவதால்தான். அந்த உறுத்தல் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னும் இருப்பதே தமிழர்க்கு நலமாகும். அன்று வீசிய காற்று வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் வீசவேண்டும் .ஒரே குரல் ஒலிக்கும் நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தரவேண்டும். மேற்கிலும் மத்தியிலும் கூட காலம் கனியலாம் . தேசியத்தில் தமிழினம் ஒன்றாக நிற்கின்றது எனும் ஒரே வெளிப்படுத்தல் எவர் வெற்றி பெற்றாலும் சாதிக்க முடியாததை தெய்வ அருளாகக் கொண்டுவரலாம்.

இந்த உண்மையை ஒவ்வொரு வாக்காளரும் ஒருதடவைக்கு இரு தடவை சிந்தித்து தமது வீட்டிலிருந்து குலதெய்வத்தின் முன்வைத்து தீர்மானிப்பின் தமிழினம் தலை நிமிரும்.

# கெற்பேலி தனிமைப்படுத்தல் முகாமில் ஆறு கடற்படையினருக்குக் கொரோனா



கொழும்பு, ஜூன் 26

கெற்பேலி தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆறு கடற்படையினருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தென்மராட்சி - கெற்பேலி இராணுவ முகாமில் கொரோனா தனிமைப்படுத்தல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களிடத்தில் நேற்று நடத்தப்பட்ட சோதனையில் ஆறு பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. (ம)

### கண்ணிவெடி அகற்றும் பகுதியில்

# ரி.என்.ரி. வெடிமருந்தை திருடியோர் விசாரணையில்

வெடிமருந்தைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் இரண்டு நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட முகமாலை தெற்கு பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை சர்வதேச நாடுகளின் உதவியுடன் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அகற்றி வருகின்றனர். இந்த நிலையில் குறித்த பகுதிக்குள் அனுமதி இன்றி நுழைந்த இரு இளைஞர்கள் குண்டுகளிலிருந்து ரி.என்.ரி வெடிமருந்தை பிரித்து எடுத்துக்கொண்டு சென்றுள்ளனர். அவர்கள் அவற்றை பசளை பையில் கட்டிக் கொண்டு செல்லும்போது அந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியிலுள்ளவர்கள் சந்தேகம் கொண்டு துரத்தியபோது இரு இளைஞர்களும் மருந்தை பனை ஓலைக்குள் மறைத்து வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். அது பற்றி நிறுவனத்தினர் பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோருக்கு தெரியப்படுத்தினர். அங்குவிரைந்த இராணுவத்தினர் அந்தப் பொதியை மீட்டனர். அதில் 2.5 கிலோகிராம் நிறையுடைய மருந்து காணப்பட்டுள்ளது. அதை மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பளை பொலிஸார் கொடிகாமம் மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்களை கைதுசெய்திருந்தனர். அவர்கள் ஆரம்ப விசாரணையின் பின்னர் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர். மேலதிக விசாரணைக்காக அவர்களை பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க பொலிஸார் மன்றிடம் அனுமதி கோரினர்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிமன்று அனுமதி வழங்கியது என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். (த-6)

## பாடசாலைகளில் துப்புரவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 26


யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் துப்புரவு பணிகள் இடம்பெறுகின்றன.

பாடசாலை சுற்றாடல் மற்றும் வகுப்பறைகள் என்பன துப்புரவு செய்யப்படுகின்றன.

எதிர்வரும்29ஆம் திகதி பாடசாலை செயற்பாடுகள் ஆரம்பமாகும் நிலையில் துப்புரவுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் இணைந்து துப்புரவில் ஈடுபட்டனர். தொற்று நீக்கியும் விசிறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

# யாழ்ப்பாணத்தில் இதுவரை 22 தேர்தல் விதிமீறல்கள்!



யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை ஒரு தேர்தல் வன்முறை சம்பவம் உட்பட 22 தேர்தல் விதிமுறை மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி. அமலராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இன்று வரை 22 தேர்தல் விதிமீறல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்ட விதிகளை மீறிய தற்கான முறைப்பாடுகள் ஆகும். எனினும் ஒரேயொரு தேர்தல் வன்முறை சம்பவம் பதிவாகியுள்ளது. அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவன தாக்குதல் சம்பவமாக பதிவாகியுள்ளது. இதனை விட பெரும் சம்பவங்கள் எவையும் இதுவரை பதிவாகவில்லை. தேர்தல் சட்ட விதிகளை மீறி வைக்கப்பட்டுள்ள பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன - என்றார். (ம-20)


**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ 1983 ரோகினி நட்சத்திரம் 1 ஆம் பாதம் இடபராசி. சூரியன் செவ் 10 இல் தனியார் வர்த்தக நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: **077 063 4154**


**மாபிள் வேலை**

தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒர சதுர அடி 45/=. இழுத்து பதிப்பதற்கு 55/= ஆகும்.
தொடர்பு: **077334 1281**

**வெள்ளவத்தையில் அறைகள்**

HOTEL VILLA வில் அறைகள் AC / NON A/C இணைந்த குளியலறை 1500-3900 வரை. 422/A, காலி வீதி, வெள்ளவத்தை.
ராமகிருஸ்ணா செட் அருகில். **077 255 2224**


## மரண அறிவித்தல்



### வேலாயுதம் இளையராஜா

கலைமகள் வீதி தையிட்டியைப் பிறப்பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் இளையராஜா நேற்று (25.06.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமி - வேலாயுதம் தம்பதியரின் புதல்வனும், வேலுப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், அனித்தா (பிரான்ஸ்), அனுஷன், அனுசா, அனுசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும், அஜித்தன் (பிரான்ஸ்), வாருஜி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தர்மராசா மற்றும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அஷ்வின், அகில், ஆகித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.

**077 0450 531** (cs. 32615) (13.17)

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் சுப்பிரமணியம் (மணியம்)

நயினாதீவை பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்பிரமணியம் நேற்று (25.06.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வைத்திலிங்கம்-கண்மணி தம்பதியரின் மகனும், ஸ்ரீரங்க குமாரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கௌசிகன், இதயராஜ் (சின்னத்தம்பி) மற்றும் ஜெயச்சந்திரன் (குட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி திருநாவுக்கரசு, நாகேஸ்வரியின் சகோதரனும், தனுசியாவின் மாமனா ரும், ஜெயடனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2020) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 3.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

68/2, இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 04 . 1956

மறைவு 25 . 06 . 2020

### கந்தையா காங்கேசன்

(ஓய்வுபெற்ற இ.போ.ச.நடத்துனர்)

நீர்வேலி தெற்கு வில்லு மதவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா காங்கேசன் நேற்று (25.06.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சோதிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கமலாதேவி தம்பதியரின் மருமகனும், வனஜாவின் அன்புக் கணவரும், வியாசகன் (வாழைக்குலைச் சங்கம் நீர்வேலி), விசாலி (யாழ். பல்கலைக்கழகம்), விபுலன் (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், நற்றவமலர், காலஞ்சென்ற கமலாஜோதி மற்றும் ரஞ்சினி ஆகியோரின் சகோதரனும், வாசினி, தர்சினி, காலஞ்சென்ற குகதாசன், மற்றும் ரேணுகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2020) வெள்ளிக்கிழமை அரவது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**077 204 8127**

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்
## கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்,

வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் கிளிநொச்சி பிரதம எந்திரி அலுவலக பயன்பாட்டிற்கு உற்பத்தி ஆண்டு 2000 அல்லது அதற்கு பிற்பட்ட வாகனம் ஒன்றினை (Van) KOICA செயற்திட்ட வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை வடமாகா்ண கட்டடங்கள் திணைக்களம் கடற்கரை வீதி. குருநகர் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு 29.06.2020 – 07.07.2020 வரை அலுவலக நேரத்தில் நிதிக் கிளையில் ரூபா 500.00 (மீள்பெறாத தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத் தினைப் பெற்று 08.07.2020ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:-

**மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்** - 0212228091

**தலைவர் / மாகாணப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்,**
**கடற்கரை வீதி, குருநகர்.**

(in.13068) (13.17)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா

(ஓய்வு பெற்ற தொலைத் தொடர்பு பரிசோதகர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)

**திதி: வளர்பிறை ஷஷ்டி**

ஐந்து ஆண்டுகள் ஆனாலும் ஈரவிழிகள்
உங்கள் நினைவால் நீர் வழிகின்றன..
அமைதியின் அடைக்கலமாய் அன்பின் பிறப்பிடமாய்
திகழ்ந்த எம் அன்புள்ளம் கொண்ட தந்தையே!
காலன் அவன் இரக்கமற்றவன் என்பதனை
உன் முடிவில் கண்டுகொண்டோம் - ஐயா
உன் நேர்மை , கனிவு, கருணை
இவையெல்லாம் உன்னை சொர்க்கத்தில்
நிழலாய் உன்னை நிலைநிறுத்தும்
உன் ஆத்மா சாந்தியடைவதாக

என்றும் நீங்கா நினைவுடன்
**குடும்பத்தினர்.**

மண் மகிழ 08.03.1954
கண் நெகிழ 22.06.2015

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

## மூழ்கா நினைவுகளுடன்
## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 05 . 1963



இறப்பு 26 . 06 . 2017

### அமரர் லலிதா சுந்தரலிங்கம் (செல்வி)

*அம்மா!*



கணம் தனிலே நிதர்சனங்கள் மாறும் நிலையில்லா
இவ்வுலகில் எமை நெடுதூரம் அழைத்துச் செல்வீர்
என நாம் நினைத்தோம்
மதிகெட்ட காலனவன் இடை வழியில்
உமைப் பறிப்பானென ஒரு போதும் நினைக்கவில்லை
இவ் உலகில் அவன் தினம் செய்யும் வேலை
இதுவென நாம் அறிவோம் ஆனால் அவன்
அறியான் அவன் பறித்தது எம் உலகை என்று
தாய் இல்லா வீடும் பூ இல்லா சோலையும்
என்றும் முழுமையடையாது உம் நினைவுகளால்
கண்ணீர் பெருக்கெடுக்க வழியற்ற கண்கள்
மூழ்கித் தவிக்கின்றது.
ஆயினும் நகர்கிறோம் விடியலை நோக்கி................

94/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

உமையிழந்து தவிக்கும்
பிள்ளைகள்

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 40 வயது கம்பியூட்டர் கிராபிக்ஸ் (வெளி நாடு மற்றும் உள் நாட்டு வேலை) மணமகனுக்கு மணமகள் தேவை. (சீதனம் பெரிதும் எதிர்பார்ப்பில்லை.
தொடர்புகளுக்கு: **077 905 8615** (வைபர்)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-01 சிவன்பண்ணை வீதி ஆதன இல 26 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் ஆதன வரிப்பதிவேட்டில் வேலன் பொன்னன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் 494ம் இலக்க 24.11.2002ம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் செல்லையா ஜெகநாதன் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி இல 26ச் சேர்ந்த செல்லையா ஜெகநாதனும் பெண் மணிலாகாந்தியும் தங்கள் மகள் சரிதாவுக்கு பிரசித்த நொத்தாரிசு றெமிடியஸ் முகதாவில் வரையப்பட்ட 939ம் இலக்க 09.05.2014ம் திகதியிடப்பட்ட சீதன உறுதி மூலம் சீதனமாக குறித்த ஆதனத்தினை துரைராஜா யசோதரனுக்கும் பெண் சரிதாவுக்கும் வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி 26 ஐ சேர்ந்த துரைராஜா யசோதரனும் பெண் சரிதாவும் சரிதாவின் பெற்றோராகிய செல்லையா ஜெகநாதனுக்கும் பெண் மணிலாகாந்திக்கும் பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் வரையப்பட்ட 1734ம் இலக்க 01.07.2017ம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தினை நன்கொடையாக வழங்கியுள்ளனர்

மீண்டும் அதே முகவரியைச்சேர்ந்த செல்லையா ஜெகநாதனும் பெண் மணிலாகாந்தியும் பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் அவர்களின் முகதாவில் வரையப்பட்ட 1816ம் இலக்க 07.10.2017ம் திகதியிடப்பட்ட சீதன உறுதி மூலம் தங்கள் மகளான பாலசிங்கம் சிவதர்சனுக்கும் பெண் அனித்தாவுக்கும் குறித்த ஆதனத்தினை சீதனமாக வழங்கியுள்ளனர்.

**ஆதன விபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் கிராமசேவையாளர் பிரிவு J/81 யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட "திருவளர்திடல்" நெற்பரப்பு (1 1/4) ஒன்றேகாலும் கல்வீடும் வடக்கு எல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் பயிர்வகைகளும் எல்லைகள்.

கிழக்கு:- எம்.குமாரசாமியின் ஆதனம். வடக்கு:- வேலுபொன்னுவின் ஆதனம். மேற்கு:- வேலுபொன்னுவின் ஆதனம். தெற்கு:- அரசாங்க ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும். தற்போது பாலசிங்கம் சிவதர்சன் பெண் அனிதா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பாலசிங்கம் சிவதர்சன் பெண் அனிதா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(து.ஈசன்)**
**பதில் முதல்வர்**
**மாநகரசபை**



### பன்னாலை – தெல்லிப்பழை
### திருவருள் மிகு வரத்தலம் கற்பக விநாயகர் திருக்கோயில்
### நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா விஞ்ஞாபனம்

**கர்மாரம்பம் :**
26.06.2020 வெள்ளிக்கிழமை பகல் 12 மணி

**எண்ணெய்க்காப்பு :**
30.06.2020 செவ்வாய்க்கிழமை
காலை 10.00 மணிமுதல் – புதன்கிழமை
காலை 10.00 மணிவரை

**கும்பாபிஷேகம்**
02.07.2020 வியாழக்கிழமை
பகல் –09.04 மணிமுதல் 11.04 மணி வரை

குறிப்பு:
சுகாதாரப்பிரிவினரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறுவதால் ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் யாவரும் கொரோனா நோய்த் தாக்கம் பற்றிய அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**ம.மகேந்திரசர்மா**
**ஆதீனகர்த்தா**

## புலிகளுக்கு...

மட்டக்களப்பு, ஜூன் 26
1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக ரணசிங்க பிரேமதாஸ அரசால் வழங்கப்பட்ட ஆயுதங்களே ஸஹ்ரான் குழுவினரின் கைகளுக்கு வந்தன - என்று பத்திரிகையாளர் ஒருவர் சாட்சியம் வழங்கியுள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று சாட்சியம் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 1990ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளால் காத்தான்குடிப் பள்ளிவாசலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அப்போதைய ரணசிங்க பிரேமதாஸ அரசால் முஸ்லிம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அவையே ஸஹ்ரான் குழுவினருக்கும் கிடைத்தன. அவர்கள் கடற்கரையில் வெளிப்படையாகவே பயிற்சிகளை மேற்கொண்டனர். பாரம்பரிய முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெற்றன. அந்த நேரத்தில் மட்டக்களப்பின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த எடிசன் குணதிலகவிடமும், காத்தான்குடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கந்தே வசந்தவிடமும் இது தொடர்பில் நான் கேட்டேன். அவர்கள் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக அவற்றை அலட்சியம் செய்தனர் என்றார். (ம)

# தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குப் பரிசீலனை

## அமைச்சர் பந்துல தகவல்

தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் தற்போது பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த மாநாடு நேற்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் பந்துல மேலும் தெரிவித்ததாவது:

தனியார் வகுப்புக்களை ஜுன் மாதம் 29ஆம் திகதி தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சமூக இடைவெளி உள்ளிட்ட உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி ஒரு வகுப்பில் ஆகக்கூடியது 100 பேர் மட்டுமே கலந்துகொள்ளலாம் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோரியுள்ளனர். உயர்தரப் பரீட்சை நெருங்கும் நிலையில் தமக்கிருக்கும் நேரக்கட்டுப்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளை ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம். எனவே மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம்- என்றார். (ம)

### 20...

வித்தார்.

திருகோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

வடக்கு, கிழக்கிலுள்ள 5 தேர்தல் மாவட்டங்களில் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20 ஆசனங்களைப் பெறும். தமிழ் பேசும் மக்கள் வாக்குகளைப் பிரிக்காமல் ஒரு குடையின் கீழ் தங்களது வாக்குகளை அளித்து சர்வதேசத்துக்கு ஒரு நல்ல செய்தியை எடுத்துக் காட்ட வேண்டும்.

இன்று தமிழ் மக்களுக்கான சரியான ஓர் அரசியல் தீர்வைப் பெற வேண்டிய சந்தர்ப்பத்தில் நாங்கள் இருக்கின்றோம். இதையெல்லாம் எல்லாத் தலைவர்களும் அதாவது மஹிந்த ராஜபக்ச, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சஜித் பிரேமதாஸ, மைத்திரிபால சிறிசேன ஆகிய தலைவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஆகவே, இம்முறை எந்த அரசு வந்தாலும் சேர்ந்து செயற்படத் தயார். கடந்த காலங்களில் நான் ஏற்கனவே கூறிய அரசியல் தலைவர்கள் உறுதிமொழி தந்துள்ளார்கள். புதிய சாசனம் உருவாக்கப்பட வேண்டும் என அனைத்தும் பதிவில் உள்ளன. சர்வதேச நாடுகளிடம் இது பதிவில் உள்ளது. ஆகையால் எந்த அரசு வந்தாலும் நமக்கு சரியான தீர்வைத் தரவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. தமிழ் பேசும் மக்கள் சிந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார். (ஒ,5,22)

### கொரோனா...

னோரின் மொத்த எண்ணிக்கை 2010ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேலும் 40 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,602ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

### அரசுக்கு...

ஆனையிறவுச் சண்டையின்போது ஒரே இரவில் மூவாயிரம் வரையிலான இராணுவத்தினரைத் தாம் கொன்றொழித்ததாகக் கருணா வெளியிட்டிருந்த கருத்தானது தெற்கு அரசியலில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவரைக் கைதுசெய்யுமாறு பௌத்த தேரர்கள் மற்றும் எதிரணியினர் ஆகியோர் வலியுறுத்தி வருகின்றனர். இதையடுத்துக் கருணாவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று 7 மணி நேரத்துக்கும் மேலாக வாக்குமூலம் பதிவு செய்தனர். ஆனால், அவர் கைதுசெய்யப்படவில்லை. இந்த நிலையிலேயே ஓமல்பே சோபித தேரர் மேற்கண்டவாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாதது:

'மனிதாபிமானம் இன்றி எமது இராணுவத்தினரைக் கொன்றழித்த கொலைகாரன் கருணாவுக்கு ஜனாதிபதியும் பிரதமரும் பாதுகாப்பு வழங்குவதை இராணுவத்தினருக்கும் நாட்டுக்கும் செய்யும் துரோகமாகவே நாம் பார்ப்போம். எனவே, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உடன் நடவடிக்கை எடுத்து கருணாவைக் கைதுசெய்யவேண்டும். அவரைச் சிறையில் அடைத்து தக்க தண்டனை வழங்க வேண்டும். இல்லையேல் அரசுக்கு எதிராக நாடு கிளர்ந்தெழும்.

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொலை செய்ததாக தனது நாவினாலே கருணா தெரிவிக்கும்போது அதற்கு வேறு சாட்சியங்கள் தேவையில்லை. எனவே, அவரிடம் விசாரணை மட்டும் போதாது. அது சிங்கள மக்களைச் சமாளிப்பதாக அமையும். நீதித்துறையின் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமெனில் கருணாவை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும்' என்றார். (ம-22)

### விசாரணைக்கு...

மலை ஆகிய பிரதேசங்களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வந்தது.

முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கடற்படையைச் சேர்ந்த சம்பத் முனசிங்க, டி.கே.பி.தஸநாயக்க, சுமித் ரணசிங்க, லக்ஷ்மன் உதயகுமார, நளின் பிரசன்ன விக்ரமசூரிய, தர்மதாஸ, ராஜபக்ச கித்சிரி, கஸ்துரிகே காமினி, அருண துசார மென்டிஸ் ஆகியோர் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டதுடன் வழக்கு தொடரப்பட்டது. இந்த நிலையில், முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை தொடர்ந்து இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

### கொலைகாரனை...

ராஜபக்ச அரசு, அவரின் பேச்சையும் நியாயப்படுத்துகின்றது' இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'கருணாவின் வரலாறு ஒன்றும் இரகசியமல்ல. அது அனைவருக்கும் தெரிந்ததே. அவரின் சர்ச்சைக்குரிய கருத்தை தற்போது எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் பிரசாரங்களுக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பலம் பெறுவதற்கு ஆயுதம் வழங்கிய நபர் தொடர்பில் கருத்துரைப்பது இல்லை' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச, குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஒரு புறத்தில் இராணுவ ஆட்சியை அரங்கேற்றிவரும் ராஜபக்ச அரசு, மறு புறத்தில் இராணுவத்தினருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் துரோகம் இழைத்து வருகின்றது. இது எந்த வகையில் நியாயம்?

இந்த ஜனநாயக நாட்டில் இராணுவ ஆட்சியை அரங்கேற்றுவதும் குற்றம்; இராணுவத்தினரைக் கொத்துக்கொத்தாகக் கொன்றழித்த கொலைகாரனைப் பாதுகாத்து இராணுவத்தினருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் துரோகம் இழைப்பதும் குற்றம். இந்த இரண்டு வேலைகளையும் ராஜபக்ச அரசு கனகச்சிதமாகச் செய்து வருகின்றது.

ராஜபக்ச அரசு இராணுவத்தினரை நேசிப்பவர்களாக இருந்தால் அவர்களைக் கொன்றழித்த கருணா அம்மானை உடன் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும். எமது இந்த வேண்டுகோள் அரசியல் பரப்புரை அல்ல. இதை விளங்காமல் நாட்டின் பிரதமர் கருத்து வெளியிடுவது வெட்கக்கேடாக இருக்கின்றது' - என்றார். (ம-22)

### கோத்தா...

என்று முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவில் நேற்று சுமார் 7 மணிநேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'விசாரணையின்போது நடந்த உண்மையை நான் சொன்னேன். தவறான கண்ணோட்டத்தில் எந்தவொரு கருத்தையும் முன்வைக்கவில்லை. அத்துடன், எவர் மனதையும் புண்படுத்தும் விதத்திலும் நான் தேர்தல் பரப்புரை செய்யவில்லை. ஊடகத்தால் வந்த சின்னதொரு பிரச்சினையே இது. இந்த நாட்டு மக்களை நாம் நேசிக்கின்றோம். எனவே, எவ்வித வன்முறைகளும் இன்றி, இனத்துவேசத்தை பரப்பாத விதத்தில் எமது தேர்தல் பரப்புரை தொடரும்.

எனது கருத்து தொடர்பில் அரசியல் வாதிகள் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது தவறான விடயம். அந்தக் காலத்தில் இடம்பெற்ற ஒரு விடயத்தை மேடைப் பரப்புரைக்காக உவமானமாக குறிப்பிட்டிருந்தேன். ஆகவே, இதனை பூதாகரமாக்குவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

குறிப்பாக எங்களுடைய ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான அரசுக்கு, சிங்கள அதாவது பெரும்பான்மையின மக்களின் வாக்குகளை குறைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சினையே இது. ஆகவே, இதனை முறியடித்து நாம் வெற்றிகொள்ளவேண்டும். அம்பாறை மாவட்டத்தில் தனித் தமிழ்க்கட்சியாகவே நாம் போட்டியிடுகின்றோம். எந்தவொரு கட்சியையோ, மதகுருமாரையோ புண்படுத்தும் விதத்தில் நான் எதுவுமே கதைக்கவில்லை. இராணுவத்தையும் நான் குறைகூறவில்லை. குறைத்து மதிப்பிடவும் இல்லை' - என்றார். (ம-44)

### வாள்...

தெரியவருவதாவது;

குறித்த வீட்டில் உள்ள அனைவரும் உறக்கத்தில் இருந்தபோது, வீட்டுக் கூரை வழியாக முகமூடியணிந்த நான்கு கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். பின்னர் அவர்கள் அங்கிருந்த சிறுபிள்ளைகளின் கழுத்தில் வாளை வைத்து , "வீட்டில் உள்ள நகை, பணம் என்பவற்றைத் தராவிட்டால் குழந்தைகளைக் கழுத்தறுத்துக் கொலை செய்வோம்" என அச்சுறுத்தினர். இதனால் பயந்துபோய் வீட்டில் இருந்த 15 பவுண் நகைகளைக் கொள்ளையர்களிடம் வீட்டுக்காரர் கொடுத்துள்ளனர். அதன் பின்னரும் வீட்டில் இருந்த பெண்மணியின் காதில் இருந்த தோட்டினை இழுத்து கொள்ளையர்கள் அறுத்தெடுத்தனர். அதனைத் தட்டிக்கேட்ட குடும்பத் தலைவரையும், ஏனையோரையும் பலமாகத் தாக்கிவிட்டு, தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் இளவாலைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இதனையடுத்து மோப்ப நாய்கள் சகிதம் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்தனர். ஆனால் இதுவரை கொள்ளையர்கள் கைது செய்யப்படவில்லை. இளவாலை, அளவெட்டி, தெல்லிப்பழை பகுதியில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. நேற்றுக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற சிறுவிளான் பகுதியில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற ஆறாவது கொள்ளைச் சம்பவம் இதுவெனவும், இந்த கொள்ளைச் சம்பவங்களும் ஒரே மாதிரியான முறையிலேயே நடந்திருப்பதாகவும், தொடர்ந்தும் கொள்ளைச் சம்பவங்கள் நடப்பதால் தாம் பெரும் அச்சத்துடனேயே இரவுப்பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த கொள்ளையர்களை உடனே கைது செய்து மக்கள் மத்தியில் உள்ள அச்சத்தைப் போக்க பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ, ம-26)

## தென்கொரியாவுக்கு எதிரானஇராணுவ நடவடிக்கை நிறுத்தம்

*அதிபர் கிம் உத்தரவு*

தென்கொரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை ஒத்திவைக்குமாறு உத்தரவிட்டார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்.

வடகொரிய இராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான முக்கிய கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் தென்கொரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்திவைக்கும்படி வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் உத்தரவிட்டார். (ம)





## கொரோனா கோரத்தாண்டவம்

# நேற்றுமுன்தினம் 175,000 தொற்று

வுகான், ஜூன் 26

உலக அளவில் கொரோனா பரவல் அதியுச்சம் அடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

சீனாவின் வுகான் நகரில் டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் கொரோனாத் தொற்று அவதானிக்கப்பட்டது. இந்த வைரஸால் ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கொரோனாவின் தாக்கம் முன்னர் அதிகரித்திருந்தது. பின்னர் அவை அதிலிருந்து படிப்படியாக விடுபட்டுள்ளன. எனினும் அமெரிக்காவும் தென்னமரிக்க நாடுகளும் தற்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் மட்டும் உலக அளவில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 96 லட்சங்களை நெருங்கியுள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 87 ஆயிரமாக உள்ளது. (ம)

## உலக நாடுகளிடையில் ஒற்றுமையே கிடையாது

### ஐ.நா பொதுச் செயலர் குத்தேரஸ் கவலை

வொஷிங்டன், ஜூன் 26

கொரோனாவுக்கு எதிரான போரில் உலக நாடுகளிடையே ஒற்றுமைத்தன்மை இல்லை - என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள்சபையின்பொதுச்செயலர்குத்தேரஸ். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்று சீனாவில் தொடங்கியது. அங்கிருந்து ஐரோப்பாவுக்கு நகர்ந்தது. பின்னர் அங்கிருந்து வட அமெரிக்காவுக்குப் போனது. தற்போது தென் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் இந்தியாவிலும் பரவி வருகிறது.

இப்போது எந்தக் கணத்திலும் கொரோனாவின் இரண்டாவது அலை வரும் என சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் கொரோனாவுக்கு எதிரான போரில் உலக நாடுகள் இடையே ஒத்துழைப்பு இல்லை. நாடுகள் ஒன்றைப் புரிந்து கொள்வது முக்கியம். கொரோனா வைரஸுக்கு எதிராக நாடுகள் ஒருங்கிணைந்து போரிடுவது மட்டுமல்ல, சிகிச்சைகள், பரிசோதனை வழிமுறைகள், தடுப்பூசிகளை அனைவருக்கும் கிடைக்கச்செய்தல் என எல்லாவற்றிலும் நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இதுதான் கொரோனா வைரஸ்



தொற்று நோயை நாம் தோற்கடிப்பதற்கான வழி ஆகும்.

வேலை இழப்புகள், வன்முறைகள், மனித உரிமைகள் மீறல் போன்ற கொரோனா வைரஸ் தொற்றின் விளைவுகளில் இருந்து மீண்டு வருவதற்கும், தொற்று நோயின் தாக்கத்தை குறைப்பதற்கும் அரசியல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அவசியம்.

தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான போரில் உலக நாடுகள் இடையே ஒத்துழைப்பு இல்லை என்பதில் நான் விரக்தி அடைகிறேன். ஆனால், புதிய தலைமுறையினர் எதிர்காலத்தில் விடயங்களை மாற்ற முடியும் என்று நம்புகிறேன்.

நாம் மனத்தாழ்மையை மேம்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது என்று கருதுகிறேன். ஏனென்றால், மனத்தாழ்மை இருந்தால்தான் நாம் வாய்ப்புகளைப் புரிந்து கொள்வோம். ஒற்றுமையும், ஒருங்கிணைப்பும் இருக்க வேண்டியதின் அவசியத்தை புரிந்து கொள்ளுங்கள் - என்றார். (ம)



## தாவரங்களுக்கு இசை நிகழ்ச்சி

மட்ரிட், ஜூன் 26

ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரில் உள்ள ஒபரா இசை அரங்கில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான தாவரங்களுக்கு மத்தியில் இசை நிகழ்ச்சியை இசைக் கலைஞர்கள் நடத்தினர். இந்த நிகழ்ச்சியின் மூலம் சுகாதாரப் பணியாளர்களுக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் உலகின் இயல்பு வாழ்க்கையையே திருப்பிப் போட்டுள்ளது. அரசியல் நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், இசை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய அணுகுமுறையில் உலக நாடுகள் கொரோனா வைரஸை எதிர்கொண்டு வருகின்றன. ஸ்பெய்னின் ஒபரா இசை அரங்கில் சுகாதாரப் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சியில் வைக்கப்பட்ட தாவரங்கள் அனைத்தும் சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் என்று இந்த இசை நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தவர்கள் தெரிவித்தனர். (ம)

வீடு வாடகைக்கு
அம்மன் வீதி திருநெல்வேலியில்.
3 படுக்கையறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உள்ளது.
வாடகை பேசி தீர்மானிக்கப்படும்.
076 221 0106

NORTHERN BLOCKS & MATERIAL SUPPLIERS
• Cement Blocks • Sand
• Metals • Pillers
• சீமெந்துக்கற்கள்
• தூண்கள் • மணல்
• கண்டகற்கள் • சல்லி
0767603066

BARATHY
கல்வி நிறுவனம்
பிரதான வீதி, சித்தன்கேணி
இடர் காலத்தில் நிறுத்தப்பட்ட வகுப்புக்கள் அனைத்தும் புதிய இடத்தில் மீண்டும் ஆரம்பமாகின்றன
கன்னா வைத்தியசாலை அருகில்
பிரதான வீதி, சித்தன்கேணி
தரம்-06 முதல் 11 வரை, O/L Day,
A/L கலை வர்த்தகம்
2020, 2021, 2022
A/L Day Class
ஆரம்பம்: 04.07.2020
சனி காலை 7.30 am
தொடர்புகளுக்கு:077 376 3511

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
[இரு இடங்களிலும்]
இடர் காலத்தில் நிறுத்தப்பட்ட வகுப்புக்கள் அனைத்தும் மீண்டும் ஆரம்பம்
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
A/L Day Class 29/06/2020
A/L 2020, 2021, 2022
04/07/2020
Note:-
• வழமையான நேர அட்டவணைப்படி
• புதிய அனுமதிகளும் வழங்கப்படுகின்றன
தொடர்புகளுக்கு:077 376 3511

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.